பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

24-30 ஏப்ரல் 2019

வாரஇதழ்



# சிவப்பு ஞாயிறு

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

எதிரொலி
Ethiroli
24-30 ஏப்ரல் 2019

# சிவப்பு ஞாயிறு




● மலைமகன்

புனித ஈஸ்டர் திருநாளில் இலங்கை வான்பரப்பை ஆக்கிரமித்து - 'தீவிர வாத' மேகங்கள் குண்டு மழைபொழிய, அப்பாவி மக்கள் அம்புபட்ட மான்போல் துடிதுடித்து உயிர்துறந்தனர். கருதரித்திருந்த தாய்மார் முதல் கனவுகளை சுமந்தபடி வாழ்ந்த சிறார்கள்வரை 250 இற்கும் மேற்பட்டோர் ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கப்பட்டனர்.

500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதையும், மேலும் பலர் உடல் அவயங்களையும் இழந்து தவிப்பதையும் ஊடங்களில் காண்கையில், கேட்கையில் விழிநீர் பெருக்கெடுக்கின்றது.

மரணத்தை வீழ்த்தி, பாவத்தை ஒழித்து, இருளை வெற்றி கொண்ட இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாளில், தேவாலயங்களுக்குள் இரத்த ஆறு பெருக்கெடுத்த பெருந்துயர் சம்பவமானது மனிதத்தை நேசிப்பவர்களின் மனங்களில் பேரிடியை விழவைத்துள்ளது.

3 தேவாலயங்கள், 3 நட்சத்திர ஹோட்டல்கள், ஒரு விடுதி, வீடு என மொத்தமாக 8 இடங்களில், சினிமாப்பட பாணியில் தொடர்ச்சியாக வெடித்த குண்டுகளால் ஒட்டுமொத்த இலங்கைத் தீவும் ஆட்டம் கண்டது. அச்சமும், பீதியும் மக்களை ஆட்கொள்ள இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.



## முதல் வெடிப்பும் காட்டுத் தீயாக பரவிய வதந்திகளும்

தமிழ், சிங்களப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக விசேட விடுமுறையில் வீடுகளுக்கு வந்திருந்தவர்கள் ஞாயிறன்றே (21) கொழும்பு நோக்கி புறப்பட தயாரானார்கள் பயணிகளின் நலன் கருத்தி மேலதிக பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. காலை 6 மணிமுதலே பஸ் மற்றும் ரயில் நிலையங்களில் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.

இந்நிலையில் காலை 8.30 இற்கும் 9.15 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கொழும்பு, மட்டக்களப்பு, நீர்க்கொழும்பு ஆகிய பகுதிகளில் ஆறு குண்டு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகின. இவை குறித்தான தகவல்கள் சமூகவலைத்தளங்களில் காட்டுத் தீயாக பரவின. இதனால், மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

போர் முடிவடைந்திருந்த நிலையில் 9 ஆண்டுகளுக்கு பின்னர் பாரியளவான குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றதால், அவை குறித்து பலகோணங்களில்கதைகள்கட்டவிழ்த்துவிடப்பட்டன. ஒருகட்டத்தில் "புலிகள் கொழும்பை தாக்கிவிட்டனராம்" என்றுகூட ஊகத்தின் அடிப்படையில் வதந்திகள் ஊதி பெறுப்பிக்கப்பட்டன. இதனால், வீட்டை விட்டு வெளியே வந்திருந்தவர்களின், மனங்கள் அச்சத்தின் உச்சத்தையே தொட்டது.

பலர் பயணத்தை இடைநிறுத்தி வீடுகளுக்கு திரும்பியது டன், முன்கூட்டியே பஸ்களில் சென்றவர்கள், இடைநடுவில் இறங்கி வீடுகளைநோக்கி நடையைக் கட்டினர். பிரதான நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் அவசர அவசரமாக இழுத்து மூடப்பட்டன. நாட்டில் ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போகின்றது என்ற பீதியால் பெரும்பாலானவர்கள் வீட்டுக்குள்ளேயே முகாமிட்டு, முடங்கினர்.

## தீவிரமாக செயற்பட்ட படைகளும் 'திகில்' சம்பவங்களும்

குண்டுவெடிப்புகள் அரங்கேறியதையடுத்து உஷாரடைந்த படையினரும், பொலிஸாரும் பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கினர். உயிரிழந்த மற்றும் காயமடைந்த மக்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையில் முதற்கட்டமாக குதித்தனர்.

புத்தாண்டை முன்னிட்டு படையினரும், பொலிஸாரும் விடுமுறையில் சென்றிருந்ததால் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருந்தது. மக்களை மீட்பதா, அல்லது பாதுகாப்பை பலப்படுத்தாவிட்டால், தேடுதல் வேட்டையில் இறங்காவிட்டால் மேலும் பல வெடிப்புகள் இடம்பெறலாம் என்ற குழப்பமும் உருவானது. இருந்தாலும் இரண்டையும் முப்படையினரும், பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் சமாந்தரமாக சமாளித்தனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதிகளை பார்வையிடுவதற்காக மக்கள் படையெடுத்ததால், அது மற்றுமொரு பிரச்சினைக்கு வழி வகுத்துவிடும் என கருதிய படையினர், உடனடியாக அதற்கு தடை விதித்தனர். அத்துடன், துறைமுகங்கள், விமான நிலையங்கள், பொருளாதார கேந்திர நிலையங்களுக்கு அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டது.

இதையடுத்து முக்கிய அரசியல் பிரமுகர்கள் கொழும்பை நோக்கி புறப்பட்டனர். காலியிலிருந்து வந்தகையோடு பாதுகாப்பு சபைக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினார் பிரதமர். வெளிநாடு சென்றிருந்த ஜனாதிபதியுடனும் தொலைபேசி ஊடாக ஆலோசனை நடத்தினார்.

பாதுகாப்பு நிலைவரம் குறித்து முப்படைத்தளபதிகள், பொலிஸ் மா அதிபரும், புலனாய்வுத்துறை அதிகாரிகளும் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் விளக்கமளித்தது டன், அடுத்து முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பட்டியலிட்டுக் காட்டி விபரித்தனர்.

இதன்படி பேஸ்புக், வட்ஸ் அப், வைபர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டன. வதந்திகள் பரவுவதை தடுக்கவும், பதற்ற நிலைமையை தணிப்பதற்காகவுமே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அரசு அறிவிப்பு விடுத்தது. அத்துடன், பொலிஸ் ஊடரங்கு சட்டத்தை அமுல்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. பாதுகாப்பும் வழமையைவிட அனைத்து பகுதிகளுக்கும் அதிகரிக்கப்பட்டது. புலனாய்வாளர்களும் களமிறக்கப்பட்டிருந்தனர்.

எனவே, இனியும் அசம்பாவிதம் எதுவும் நடக்காது. நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என சிந்தித்து முடிப்பதற்குள் தெஹிவளை, தெமட்டகொடை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களானவை அனைவரையும் கிலிகொள்ள வைத்தது. மாலை 3 மணிக்கு பிறகு பிரதான நகரங்களில் மயான அமைதி நிலவியது. ஒருபுரத்தில் மரண ஓலம், மறுபுறத்தில் அச்சம், பீதியென இலங்கைத் தீவே நடுநடுங்கியது எனலாம்.

இதையடுத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இரண்டு நாட்கள் விசேட விடுமுறை வழங்கப்பட்டன.

## கதிகலங்கிய கட்டுநாயக்க விமான நிலையம்

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகிலும் இரவு குண்டு ஒன்று மீட்கப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆறு அடி நீளமுடைய பிவிசி குழாய் ஒன்றில் இந்தக் குண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. இது உள்நாட்டு தயாரிப்பு என கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில்அடுத்தடுத்து வெடித்த குண்டுகளை அடுத்தும், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெரும் கூட்ட நெரிசல் ஏற்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

விமானப் பயணிகள் 4 மணி நேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வர வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்ததால், ஆயிரக்கணக்கான பயணிகள் ஒரே நேரத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் நுழைய முயன்றனர்.

இதனால்நுழைவாயிலில்பெரும் கூட்ட நெரிசல்ஏற்பட்டது. நீண்ட வரிசையில் விமானப்பயணிகள் காத்திருக்க நேரிட்டது.

எனினும், 22 ஆம் திகதி முதல் கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகள் முற்றிலும் வழமையாக இருப்பதாக விமான நிலைய, விமான சேவைகள் நிறுவனத்தின் உதவித்தலைவர் பிரியந்த காரியப்பெரும தெரிவித்தார்.

அத்துடன், விமான நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு, நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மத்தல விமான நிலையத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## கைவேட்டை தொடர்கிறது ஆயுதங்களும் மீட்பு

குண்டுவெடிப்புகளுடன் தொடர்புடைய நபர்களால் பயன்படுத்தப்பட்ட இரண்டு வாகனங்கள் 21 ஆம் திகதி இரவு கைப்பற்றப்பட்டுள்ளன. தாக்குதல்களை தற்கொலைக் குண்டுதாரிகளே நடத்தினர் என்றும், ஒரே குழுவினரே நன்கு திட்டமிட்டு நடத்தியதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடைய 24 சந்தேகநபர்கள் 22 ஆம் திகதி காலைவரை கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 10 பேர் மேலதிக விசாரணைகளுக்காக, சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் 21 ஆம் திகதி பிற்பகல் தெமட்டகொடவில் உள்ள அடுக்கு மாடி வீடு ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர். அப்போது, அங்கிருந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்கவைத்துள்ளார். அதில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இரண்டு காவலர்களும் உயிரிழந்தனர். மேலும் சிலர் காயமடைந்தனர். அந்த வீட்டுக்குள் பெண் ஒருவரும் இரண்டு குழந்தைகளும் இறந்து கிடந்தனர்.

இதையடுத்து, சிறப்பு அதிரடிப் படையினரும் காவல்துறையினரும், வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த சிலரைக் கைது செய்தனர். அத்துடன் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. அந்தக் காரில் ஷங்ரி-லா விடுதியில் பயன்படுத்தப்படும் தண்ணீர் போத்தல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரும் மற்றொரு வானுமே, தற்கொலைக் குண்டுதாரிகளையும், குண்டுகளையும் எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## துயரில் விதியெழுதி.....

இந்தப் புத்தாண்டு இலங்கைக்கு விபத்து ஆண்டாக மாறியிருக்கிறது. எங்கு பார்த்தாலும் விபத்துச் செய்திகளே வந்தபடியிருக்கின்றன. இந்த விபத்துக்களில் இயற்கையால் நிகழ்ந்தவை போக, (மின்னல் தாக்கம் போன்றன) ஏனையவை யாவும் மனிதத் தவறுகளால் இடம்பெற்றவையே. அதிலும் அதிவேகம், தூக்கக் கலக்கம் என்பன அப்பாவி மனித உயிர்களைக் காவு கொள்வதில் முன்னின்றன.

புத்தாண்டு பிறந்த பின்னர் அதிகம் கவனத்தை ஈர்த்த விபத்து, மஹியங்கனையில் 10 பேரைப் பலி கொண்ட சம்பவமே. மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பமொன்று, சுற்றுலா சென்ற இடத்தில், சாரதியின் தூக்கக் கலக்கத்தால் கூண்டோடு சாவடைந்துள்ளனர். அந்தப் பத்துப்பேரில் அப்பாவிக்குழந்தைகள் மூவர். தனியொரு மனிதனின் அலட்சியச் சாரத்தியம், அவனை நம்பிப் பயணித்தவர்களைப் பலியெடுத்துள்ளது.

இந்த விபத்தை ஒரு பரபரப்பான செய்தியாக அறிந்து, 'உச்' கொட்டி விட்டு வழக்கம் போல நகர்ந்து விடுவோம். பிறௌ இன்னொரு விபத்து நடக்கும் போதும் இதே செய்கை. எப்படி இது போன்ற விபத்துக்களைத் தடுக்கலாம் என்பது பற்றி ஆக்கபூர்வமாக எவரும் செயற்படுவதில்லை. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில், போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிரான தண்டப்பணத்தை 25 ஆயிரம் ரூபாவாக அரசு அறிவித்த பின்னர் தான், அதிகளவில் உயிர்ப்பலி எடுக்கும் விபத்துக்கள் நேர்ந்துள்ளன.

வெறுமனே தண்டப்பணத்தை உயர்த்துவது அரசுக்கு வருவாயை அதிகரிக்கவும், பொலிஸாரின் பொக்கற்றை நிரம்பவும் தான் உதவுமே தவிர விபத்துக்களைத் தடுக்க உதவப் போவதில்லை என்பதையே புத்தாண்டுக்கு பின்னர் இதுவரை 50 பேர் வரை விபத்துக்களில் பலியான சம்பவங்கள் நெற்றிப்பொட்டில் அறைந்து சொல்கின்றன.

இலங்கையை விடவும் அதிக சனத்தொகையும், அதிக வாகனங்களையும் கொண்ட நாடுகளில் கூட, இப்படி வகைதொகையாக விபத்துக்கள் நிகழ்வதில்லை. அப்படி நடந்தாலும் இப்படி உயிர்ப்பலிகள் ஏற்படுவது அரிது. அப்படியானால் இங்கே இப்படி விபத்துகளின் தாயகமாக இலங்கை மாறிப்போவதால், எங்கோ ஓரிடத்தில் தவறு இருப்பது புலனாகின்றது.

அரசு சாரத்தியத் தவறிழைப்பவர்களுக்கு , வெறுமனே தண்டத்தை அறவிடாமல், அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை குற்றத்தின் தன்மைக்கேற்ப தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இரத்துச் செய்யலாம். இரவு வேளைகளில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் அதற்குரிய உடல்தகுதியைக் கொண்டிருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திய பின் சேவையில் ஈடுபட அனுமதிக்கலாம். இரவு நேரத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் சாரதிகள் தொடர்ச்சியாக ஓய்வின்றி சேவையில் ஈடுபடாமையை கட்டாயப்படுத்தலாம். அதேபோல் பயணம் செய்பவர்களும் தங்கள் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளின் நலனில் அக்கறை எடுக்க வேண்டும். அவருக்கு தூக்கம் வருவது போல கண்டுகொண்டால் சிறிது நேரம் அவரை வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு உறங்கச் செய்து விட்டு பயணத்தைத் தொடர வேண்டும்.

இதை விட பொதுவான பயணிகள் சேவைகளின் போது தங்கள் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் குடிபோதையில் இருந்தால், செல்போன் பேசியபடி வாகனத்தைச் செலுத்தினால் அது குறித்து முறைப்பாடு செய்ய அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்து, அதில் வரும் அழைப்புகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் அரசு முன் வந்தால், பெரும்பாலான விபத்துகளைத் தடுப்பதோடு, இப்படி துயரில் விதியெழும் துன்பியல் நிலையை ஓரளவுக்கு மாற்ற முடியும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

> **2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது ஐக்கிய தேசியக்கட்சி பொதுவேட்பாளர்களையே களமிறக்கியது. ஆனால், இம்முறை ஐ.தே.கவிலிருந்தே ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு இடம்பெற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.**


# மோதிக்கொள்ளும் கும்பி யானைகள்!

■ எஸ். பிரதா

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், உப தலைவர் ரவி கருணாநாயக்கவுக்குமிடையிலான சொற்போர் உச்சம் தொட்டதையடுத்து, இதுவிடயத்தில் அவசரமாக தலையிடவேண்டிய நிலை கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இருவரையும் நேரில் அழைத்து, ஒரே மேசையில் அமரவைத்து சமரசப்பேச்சுகளை பிரதமர் விரைவில் நடத்துவார் என்றும், இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் சிறிகொத்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

பிரதித் தலைவருக்கும், உப தலைவருக்குமிடையிலான மோதல் உக்கிரமடையும் பட்சத்தில், ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபடும் என்பதாலும்,- அவ்வாறு ஏற்பட்டால் அது அடுத்து நடைபெறவுள்ள தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதாலுமே இது விடயத்தில் பிரதமரை அவசரமாகத் தலையிடுமாறு பின்வரிசை எம்.பிக்கள் ஓரணியில் திரண்டு கோரிக்கை முன்வைத்தனர்.







சஜித்பிரேமதாச மற்றும்ரவி கருணாநாயக்கவுக்கிடையிலான மோதல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இருவரும் பொதுவெளியில் சிரித்தபடியே வலம்வந்தாலும் மனதுக்குள் 24 மணிநேரமும் பகைமை பொங்கிக்கொண்டேதான் இருக்கும். இது அவ்வப்போது வெளிக்கிளம்பினாலும் சண்டையானது இப்படி சந்திக்கு வந்ததில்லை. ஆனால், இன்று இருவரும் கடும் சொற்போரில் பகிரங்கமாக ஈடுபட்டுவருகின்றனர். இதற்கு காரணம் என்ன?

2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது ஐக்கிய தேசியக்கட்சி பொதுவேட்பாளர்களையே களமிறக்கியது. ஆனால், இம்முறை ஐ.தே.கவிலிருந்தே ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு இடம்பெற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வேட்பாளர் பட்டியலில் சஜித் பிரேமதாசவின் பெயரே முன்னணியில் இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக ரணில், கரு ஆகியோரின் பெயர்கள் உள்ளன. சஜித் போட்டியிட வேண்டும் என்பதே ஐ.தே.கவுடன் கூட்டணி வைத்துள்ள பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரணில்தான் கட்சியின் தலைவர். அவரே ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்ற கருத்தை ரவி கருணாநாயக்க விதைத்துள்ளார். அத்துடன், நின்றுவிடாமல், தாய், தந்தையின் பெயரை வைத்து அரசியல் நடத்த முடியாது எனவும் சஜித்தை இலக்குவைத்து சொற்கணைகளைத் தொடுத்திருந்தார்.

ரவியின் இந்த உரையானது சஜித்தை சினம்கொள்ள வைத்தது.

இதையடுத்து ரவிக்கு பதிலடி கொடுக்க தீர்மானித்த சஜித்," நான் வங்கிக்கொள்ளை அடித்து அரசியல் நடத்தவில்லை. மனைவியை விட்டு இலஞ்சம் வாங்கவில்லை. சூழ்ச்சியில் ஈடுபடவில்லை." என்றெல்லாம் விளாசித்தள்ளியிருந்தார்.

இவ்வாறு இருவருக்குமிடையிலான சொற்சமர் நீடித்துவரும் நிலையிலேயே, சமசர முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இது வெற்றியளிக்குமா அல்லது சர்ச்சையில் முடியுமா என்பதே தற்போது எழுகின்ற மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும்.

பிணைமுறி விவகாரம் உட்பட மேலும் சில விடயங்களால் ரவியால் அரசியலில் இனி உயர்பதவிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான், சஜித்துக்கு குழிபறிக்கும் செயலில் ரவி இறங்கியுள்ளார் என சஜித்தின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சஜித் செல்வாக்குமிக்க அரசியல்வாதியெனில் அவரால் ஏன், அம்பாந்தோட்டை மாவட்டத்தை அதுவும் தனது தொகுதியைக்கூட வெற்றிபெற வைக்கமுடியவில்லை? என கேள்வி எழுப்பும் ரவியின் ஆதரவாளர்கள், வடகொழும்பின் ஒட்டுமொத்த வாக்கு வங்கியும் ரவியின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் சிலர் ரவியுடன் கரம்கோர்த்து செயற்படுகின்றனர். எனவே, சஜித்துக்கும், ரவிக்குமிடையிலான மோதலுக்கு முடிவுகட்டாவிட்டால், அது ஐ.தே.கவுக்குதான் பேராபத்தாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனாலேயே இந்தக் கும்கி யானைகளின் மல்லுக்கட்டலை முடிவுக்கு கொண்டு வர ரணில் களமிறங்கியுள்ளார்.

"இப்படியே நீங்கள் இருவரும் பிளவுற்று கட்சியைப் பலவீனப்படுத்தினால், இம்முறையும் பொது வேட்பாளரையே களமிறக்க வேண்டி வரும்" என்று ரணில் கொடுத்த 'டோஸ்' ரவியையும், சஜித்தையும் கொஞ்சம் வேகம் தணிக்க வைத்துள்ளது. ஆயினும் யானைகளின் பிளவை வைத்து இன்னொரு அரசியல்சதுரங்கத்தை விளையாட மஹிந்தவும் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளார். இதனால் கொழும்பு அரசியல் அடுத்தடுத்த வாரங்களில் இன்னும் தீப்பிடிக்கக்கூடும். ■

# இதுதான் உயிரின் ஆரம்பம்




● ராஜ் சிவா

( சென்ற வாரத் தொடர்ச்சி)

நீண்டு பரந்திருக்கும் மெரினாக் கடற்கரைக்குச் செல்லுங்கள். அங்கு யாருமே இல்லை. நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள். உங்கள் கையில் இருக்கும் கடுகை எடுத்து மணல் பரப்பில் வையுங்கள். சற்றுத் தள்ளிச் சென்று கடுகைப் பாருங்கள். அப்போது கடுகு உங்களுக்குத் தெரிகிறதென்றே வைத்துக் கொள்வோம். நூறு மீற்றர் தொலைவுக்குச் சென்று பாருங்கள். இப்போது கடுகு தெரியுமா? இன்னும் சற்றுத் தொலைவாக, ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து பார்க்கிறீர்கள். இப்போது கடுகைப் பார்க்க முயல்வதென்னும்போதே உங்களுக்குச் சிரிப்பு வரும். இதுவே 13000 கிலோமீற்றர் தூரத்தில் இருந்து பார்க்கிறீர்கள் என்றால், அங்கு கடுகில்லை, மெரினாக் கடற்கரைகூட இல்லை, சென்னையே தெரியாதல்லவா? ஆனால், பதின்மூன்றாயிரம் கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து, ஒரு கடுகை நாம் பார்த்திருக்கிறோம். பார்த்தது கடுகல்ல, இராட்சசன். 55 மில்லியன் ஒளிவருடங்களுக்கு அப்பால் இருக்கும் இராட்சசன்.

'மெஸ்ஸியர் 87' (Messier 87. சுருக்கமாக M87) என்னும் உடுத்திரளின் கருவாக அமைந்திருக்கும் கருங்குழியே அந்த இராட்சசன். அது என்ன இராட்சசக் கருங்குழி? சாதாரணமாகப் பல மில்லியன் கருங்குழிகள் நம் பால்வெளி உடுத்திரளிலேயே நிறைந்திருக்கின்றன. அவையெல்லாம் 'சூசூ டிவி' பார்க்கும் குட்டிப் பாப்பாக்கள். பெரிய நட்சத்திரங்கள் இறந்து உருவாகும் குழந்தைகள். ஒரு பேச்சுக்கு, நம் சூரியன் இறந்து கருங்குழியானால் (சூரியன் கருங்குழி ஆகாது. அதற்கான போதிய எடை அதற்கு இல்லை), வெறும் 3 கிமீ. அளவுள்ள கருங்குழியாகவே இருக்கும். இதுபோன்ற சாதாரணப் பால் குடிகள் நிறைந்ததுதான் பால்வெளி. அவற்றையெல்லாம் பார்க்கவே முடியாது. சில கிலோ மீற்றர் அளவுள்ள கருந்துளைகளைக் கண்டுபிடிப்பது சிரமமானது. கறுப்பானாலும் களையாயிருப்பது இராட்சச கருங்குழிகள் மட்டுமே. ஒவ்வொரு உடுத்திரளும் (Galaxy), தன் மையக் கருவாக ஒரு இராட்சச கருங்குழியைக் கொண்டிருக்கும். அப்படியான ஒன்றைத்தான்(M87 ஐத்தான்) உடுத்திரளின் மத்தியில் நாம் கண்டிருக்கிறோம்.

எம்-87 இன் மையக் கருங்குழியானது, சூரிய எடையைப் போல் ஆறரை பில்லியன் மடங்கு பெரியது. அதன் விட்டம் 20 பில்லியன் கிலோமீற்றர். அதைச் சுற்றிவரும் ஒளித்துகள்களுடன் சேர்த்து, 100 பில்லியன் கிலோ மீற்றர் விட்டம் கொண்டது. இதுவே, 550 பில்லியன் பில்லியன் கிலோமீற்றர்களுக்கு அப்பால், ஒரு கடுகை 13000 கிலோமீற்றர் தொலைவிலிருந்து பார்ப்பது போன்று தெரிகிறது. இப்போது சொல்லுங்கள். இவ்வளவு தூரத்திலிருந்து எடுக்கப்படும் படம், எப்படித் துல்லியமாகத் தெரியும்? இந்தளவு துல்லியத்தைப் பெறுவதற்கே எவ்வளவு மினக்கெடல்? அதுமட்டுமல்ல. "இப்படியான துல்லியமற்ற படத்தை எடுத்துவிட்டா இப்படித் துள்ளுகிறார்கள்?" என்று சிலர் எள்ளி நகைக்கிறார்கள். உங்கள் வீட்டில் சுழன்று கொண்டிருக்கும் காற்றாடியைத் (Fan) துல்லியமாகப் படமெடுத்துத் தரும்படி சொன்னால், அந்தக் காற்றாடி சுழலாமல் இருக்கும்போது படமெடுத்துத் தருவீர்கள். அதுவே, காற்றாடி சுற்றிக் கொண்டிருக்கும்போது படமெடுத்திருந்தால், துல்லியமாகத் தெரிந்திருக்குமா? இல்லையல்லவா? 'என்னிடம் வேகமாக அசையும் பொருட்களைப் படமெடுக்கக்கூடிய நவீன கமெரா இருக்கிறது. அதனால். காற்றாடி சுற்றிக் கொண்டிருக்கும்போதே நிலையான படத்தை என்னால் எடுக்க முடியும்' என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், அதுவும் ஒரு குறிப்பிட்ட வேகம் வரைதான் முடியும். எம்- 87 கருங்குழியானது, கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அதை எப்படி நிலையான கருங்குழியாகப் படமெடுக்க முடியும்? இதுவரை நாம் பார்த்திருந்த கருங்குழிகளின் படங்கள் அனைத்துமே கணனியால் உருவாக்கப்பட்ட மாதிரிப் படங்கள். அவை நிலையாக இருக்கக்கூடியதாகக் கருதும் கருங்குழியின் படங்கள். ஆனால், இப்போது பெறப்பட்டது நிஜமான கருங்குழி. பாலே நடனமாடும் பெண் போல அதிவேகமாகச் சுழன்று கொண்டிருக்கும் கருங்குழி.

சந்திர கிரகணத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நீங்கள் மறைக்கப்பட்ட நிலையில் கருமையாகப் பார்ப்பது சூரியனின் நிழல்தான் என்றாலும், உண்மையில் அங்கு தெரிவது சந்திரன்தான். இந்த நிலையை நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால், இனி நான் சொல்லப் போவதையும் புரிந்து கொள்வீர்கள். ஒரு கரிய நிறப் பொருளை உங்களால் படமெடுக்கவே முடியாது. அதற்கு அந்தப் பொருளிலிருந்து ஒளி வரவேண்டும். எந்த ஒளியையும் வெளியே விடாத கருங்குழியை எப்படிப் படமெடுக்க முடியும்? எம்- 87 கருங்குழியின் நிழலானது, அதன் நிகழ்வு எல்லையில் (Event horizon) விழும்போது பெறப்பட்ட தோற்றத்தையே நாம் படம் பிடித்திருக்கிறோம். இதுவும் ஒருவகை நிழல்தான். ஆனாலும், அங்கு தெரிவது என்னவோ கருங்குழியின் தோற்றம்தான். அதிர்ஷ்டவசமாக எம்- 87 ஐத் தூசுத் துணிக்கைகளும், வாயுத் துகள்களும் சூழ்ந்திருக்கின்றன. அங்கிருக்கும் அதிவெப்பத்தினால் அவை ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. எம்-87 இன் ஈர்ப்பினால் வளைக்கப்பட்ட காலவெளியின்(Space time) ஊடாக, அந்த ஒளிரும் துகள்களும் நெருப்பு வளையமாகச் சுற்றுகின்றன. அதுவே, எம்-87 ஐக் கண்டுபிடிக்கவும், படமெடுக்கவும் நமக்கு வாய்ப்புகளைக் கொடுத்திருக்கின்றது.

இவையெல்லாவறையும் சாத்தியமாக்கியது நிகழ்வெல்லைத் தொலைநோக்கித் திட்டம்தான். இன்றுவரை உலகின் மிக முக்கியமான எட்டுத் தொலைநோக்கிகளை ஒன்றுசேர்த்து இந்த நிகழ்வெல்லைத் தொலைநோக்கி உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதன் துல்லியத்தை மேலும் அதிகரிக்கலாம். அதிகரிக்கவும் வேண்டும். இவற்றுடன் மேலும் சில தொலைநோக்கிகளை இணைந்தால், வானியல் ஆராய்ச்சியில் பல மைல் கற்களைத் தொட்டுவிடலாம். இன்னும் நாம் பார்த்துத் தெளிவடைய வேண்டிய பொருட்கள் விண்வெளியில் நிறையவே உண்டு. குவேசார்கள், பல்சார்கள் என்று பலவகை விண் பொருட்கள் ஜாலம் காட்டியபடி இருக்கின்றன. அதிகம் ஏன், வோர்ம் ஹோல்கள்கூட இருக்கின்றனவா என்று பார்த்துவிடலாம். ஆனாலும், கருங்குழிகள்பற்றி இன்னும் நிறைய அறிந்துகொள்ள வேண்டும். நம் சொந்தப் பால்வெளியின் மையக் கருங்குழி பற்றியும் அறிய வேண்டும். பதினாறு வருடங்களாகச் சஜிட்டாரியஸ் வழியாக அந்தக் கருங்குழியைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறார்கள். அங்கு பல நட்சத்திரங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தை வித்தியாசமான முறையில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அதிலிருந்து, அந்த இடம் ஒரு இராட்சசக் கருங்குழியெனக் கணித்துள்ளார்கள். அதுவே பால்வெளியின் மையமும்கூட. அந்தக் கருங்குழியைச் சுற்றும் S2 'என்னும் நட்சத்திரம் அந்தக் கருங்குழியின் ஈர்ப்பினால் கவரப்பட்டு, அதை 2.5% ஒளியின் வேகத்தில் நெருங்கிக் கொண்டு செல்வதை அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள். யாருக்குத் தெரியும், என்றாவது ஒருநாள் அந்த S2 நட்சத்திரம், கருங்குழியின் நிகழ்வு எல்லையைத் தொடும்போது வான வேடிக்கைகள் நிகழலாம். அப்போது இதுபோன்ற நெருப்பு வளையம் அங்கும் தோன்றலாம்.

இறுதியாக ஒன்று. 55 மில்லியன் ஒளிவருடங்களுக்கு அப்பால் இருக்கும் கருங்குழியை நாம் இன்று பார்க்கிறோம் என்றால், அது 55 மில்லியன் வருடங்களுக்கு முன்னிருந்த கருங்குழியின் படமாகத்தான் இருக்கும். அங்கிருந்து ஒளி, பூமியை வந்தடைய 55 மில்லியன் வருடங்கள் தேவை. அதனால், அந்தக் கருங்குழி இன்று இருக்கிறதா, இல்லையா? என்ற கேள்வியெல்லாம் கேட்டு நாம் குழம்பிவிடத் தேவையில்லை. பிரபஞ்ச விதியின் அடிப்படையே அதுதான். அனைத்தும் இறந்த காலம்தான். நாம் எதையும் நிகழ்காலத்தில் பார்ப்பதில்லை. உங்கள் அருகிலிருக்கும் மனைவியைக் கூட. ஒளி உங்களை வந்தடைய எடுக்கும் நேரத்தின் அளவான காலத்தை இழந்தே நாம் எதையும் பார்க்கிறோம். இப்போது அது அங்கே இருக்கிறதா என்ற கேள்வியுடன் வானத்தைப் பார்த்தால், நான்கு ஐந்து நட்சத்திரங்களைத் தவிர ஏனைய அனைத்து நட்சத்திரங்களும் இப்போது இருக்கின்றனவா என்பதை உங்கள் வாழ்நாளில் தெரிந்து கொள்ளவே முடியாது. அதைத் தெரிந்து கொள்பவர்கள் உங்களுக்குப் பின்னர் வரும் சந்ததியினராக மட்டுமே இருக்கும். காரணம், நான்கு ஐந்து நட்சத்திரங்களைத் தவிர ஏனைய அனைத்து நட்சத்திரங்களும் நூறு ஒளியாண்டுகளுக்கு அப்பால்தான் இருக்கின்றன. அம்மி மிதித்த பின் நாம் பார்க்கும் அருந்ததி நட்சத்திரம்கூட அங்கு இருக்கிறதா என்று நமக்குத் தெரியவே தெரியாது. இயற்பியலில் ஆழமாகச் சென்று சிந்திக்கும்போது, வாழ்க்கையின் சுவாரஷ்யங்களும், பயமுறுத்தல்களும் நம்மை விட்டு நழுவிப் போய்விடும்.

55 மில்லியன் ஒளியாண்டு தூரத்தில் வந்தது நீங்கள் நினைப்பது போன்று ஒளியல்ல. முதலில் நீங்கள் நினைக்கும் ஒளியென்பது ஏழு வர்ணங்களைக் கொண்ட, 'காணும் ஒளிக்கற்றைதான்' (Visible Spectrum). இது ஒரு ஒளியலையின் நூறில் ஒரு பங்குகூட இல்லாதது. 99 சதவீதமான ஒளியை நாம் கண்ணால் காணமுடியாது. அவை, காமா ஒளிக்கற்றை, எக்ஸ் ஒளிக்கற்றை, ஊதா கடந்த ஒளிக்கற்றை, இன்பிரா சிகப்பு ஒளிக்கற்ரை, மைக்ரோ அலை, வானொலி அலை, நெடு வானொலி அலையெனப் பலவகைகளில் நீண்டு கொண்டே போகின்றது. இதில், வானொலி அலைகளைப் பயன்படுத்தியே நாம் தொலைநோக்கிகளால் நெடுந்தூரமிருக்கும் பொருட்களைப் பார்க்கிறோம். இவையே பின்னர் கணணிகள் மூலம் படங்களாக மாற்றிக் கொள்ளப்படுகின்றன. வானொலி அலைகள் அதிக அலைநீளம் கொண்டவை என்பதால், நெடுந்தூரம் பயணிக்கக் கூடியவை. எம்- 87 ஐயும் இந்த அலைகள் மூலமே கண்டுகொண்டோம்.

இவற்றையெல்லாம் ஒரு அறிவாகப் பார்த்துவிட்டு விலகிவிடலாம். இயற்பியல் அவ்வளவு வலிமைமிக்க உண்மைகளைச் சொல்லக்கூடியது. நாம் நம்பும் உண்மைகளே, உண்மைகள் இல்லை என்று நிரூபிக்கக்கூடியது. அதனால், அவற்றைப் பற்றி ஒருவர் விளக்கும்போது, அதைக் கேட்டுவிட்டு, 'வாவ்!' என்ற ஆச்சரியத்துடன் நகர்ந்துவிடுங்கள். அதையே தூக்கிக்கொண்டு செல்லாதீர்கள். ■




கேள்வி – "மனைவி சொல்லே மந்திரம்" என்று ஒரு பழமொழி இருக்கிறதே. அதன்படி வாழ்வதுதான் நல்லதா கைப்புள்ள?

**சி.ராமசாமி, கோண்டாவில்**

**பதில்** - மனைவி பேச்சைக் கேட்டா "பொண்டாட்டி தாசன்" என்ற புகழும் உமக்கு வந்துசேரும் பரவாயில்லையா?

கேள்வி – அம்மாவும் பெண். மனைவியும் பெண். இருவருக்கும் என்ன வித்தியாசம்?

**வி.தர்ஷன், மட்டுவில்**

**பதில்** - நாம எதைச் சொன்னாலும் நம்புவது அம்மா. தலை கீழாக நின்று எப்படிச் சொன்னாலும் நம்பாதது வீட்டம்மா.

கேள்வி – சில பொருட்களை அவசரப்பட்டு கடையில் வாங்கி விடுகிறேன். பிறகுதான் பீல் பண்ணுகிறேன். உனக்கு அந்த மாதிரி அனுபவம் உண்டா கைப்புள்ள?

**எம்.லிங்கேஸ், வவுனியா**

**பதில்** - கரண்டி ரொம்ப வெயிட் என்பது கடையில் வாங்கும்போது தெரியாது. வீட்டில... வாங்கும்போதுதான் தெரியும்.

கேள்வி – "ஆசையே துன்பத்துக்குக் காரணம்" என்று சொல்கிறார்களே... அதற்கு நல்ல ஒரு உதாரணம் தர முடியுமா தல?

**கே.கபிலன், உடுப்பிட்டி**

**பதில்** - என் மனைவியை நான் ஆசைப்பட்டுத்தானே... கல்யாணம் பண்ணிக்கிட்டன். ஒன்று போதுமா? இல்ல...

கேள்வி – என் மகன் சைக்கிள் ரேஸ்ல முதல் பரிசு வாங்கினான். உனக்கு சைக்கிள் ஓட்டத் தெரியுமா கைப்புள்ள?

**ஜே.புஷ்பலதா, கைதடி**

**பதில்** - உங்க மகன் பின்னிப் பெடலெடுத்திட்டான்னு சொல்லுங்க. எனக்குப் பின்னிவிட மட்டும்தான் தெரியும்.

கேள்வி – மாடியில கஞ்சா வளர்த்த இன்ஜினியர் தமிழ்நாட்டில் கைது என்று பேப்பரில் படித்தேன். நீயும் இன்ஜினியரிங் படித்ததாகக் கேள்விப்பட்டேன் உண்மையா?

**கே.கிரிதரன், பளை**

**பதில்** - இன்ஜினியருக்கு வேலையும் தரமாட்டானுக. விவசாயமும் பண்ண விட மாட்டானுக.

கேள்வி – ஒரு நோட்டி ஜோக் சொல்லு கைப்புள்ள?

**எம்.சிவதாஸ், அரியாலை**

**பதில்** - "நான் லண்டன் போகிறேன். உங்களுக்கு என்ன பரிசுப்பொருள் வாங்கி வர?" என்று கணவனிடம் கேட்டாள் மனைவி. "எனக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண் வேண்டும்" என்றான் கணவன். லண்டன் போன மனைவி ஒரு மாதம் கழித்து வீடு திரும்பியபோது, "எங்கே நான் கேட்ட பரிசு" என்றான் கணவன். "என்ன அவசரம் ஒன்பது மாதங்கள் பொறுத்திருங்கள்" என்றாள் மனைவி.

கேள்வி – உலகத்தில பெரிய ஏமாற்றம் எது கைப்புள்ள? காதல் தோல்விதானே?

**வி.தர்ஷினி, நீர்வேலி**

**பதில்** - அட போப்பா... செல்போன சார்ஜர்ல போட்டுட்டு... சுவிட்ச் போடாம இரண்டு மணி நேரம் கழிச்சுப் போய்ப் பார்க்கும்போது வருமே. அதுக்கு முன்னாடி காதல் தோல்வியெல்லாம் நத்திங்ய்யா.

கேள்வி – இத்தனை வருஷ வாழ்க்கையில சலிக்காத ஒன்று இருக்குது என்றால் அது என்ன?

**எம்.நிசாந்தன், கல்வியங்காடு**

**பதில்** - வேறென்ன "சோறு" மட்டும்தான்.





## 29க்கும் 61க்கும் டும் டும் டும்

இணையத்தில் வாழ்க்கைத் துணையை தெரிவு செய்வது என்பது இந்தக் காலத்தில் சகஜமான ஒன்றாக மாறிவிட்டது. பேஃஸ் புக் நட்புக்கள் பல திருமணத்தில் முடிந்திருப்பது நாம் அறிந்ததே. ஆனால் அதன் பின் அவர்களின் வாழ்க்கை எந்தப்பக்கம் இழுத்துச்செல்லப்படுகிறது என்பது யாருக்கும் தெரியாது. இப்படித்தான் அமெரிக்காவைச் சேர்ந்த 61 வயதுப் பெண்ணுடன் பேஃஸ் புக்கில் நண்பரான நைஜீரியாவை சேர்ந்த 29 வயது ஜூடி, அமெரிக்காவில்வசிக்க ஆசைப்பட்டு அப்பெண்ணையே திருமணம் செய்துகொண்டுள்ளார். ஜூடி அவரை விட 32 வயது அதிகமான பெண்ணை மணப்பதை அவருடைய உறவினர்களுள் பலரும் எதிர்த்தாலும் சிலர் பச்சைக் கொடி காட்டியுள்ளனர்.


## சம்பளத்தோடு சுற்றுலா


© Matt Lepre

வேலை செய்வது கட்டாயம் என்றாலும் பலரும் இன்று மனஉளைச்சலோடு தான் வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி வேலை செய்வோருக்கும் வேலை தேடுபவர்களுக்கும் அரிய அழைப்பொன்று அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் கோடீஸ்வரரால் விடுக்கப்பட்டுள்ளது.

26 வயதில் மாதத்துக்கு 120,000 டொலர் வரை சம்பாதிக்கும் மேத்யூ லெப்ரே தனது மின் வணிகம் மற்றும் வர்த்தகப் பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப்பயணத்தில் தன்னுடன் இணைந்து பயணிக்கவிருக்கும் ஒரு பணியாளருக்கு 52,000 டொலரைச் சம்பளமாக வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

மேலும் பெண் பணியாளர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து அவர்களுக்காகத் தனியாக தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படுவதோடு உடல் நலக் காப்பீடும் செய்து கொடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். கரும்பு தின்னக் கைக்கூலி கொடுக்கும் காலம் இது.



## தவறும் பேஃஸ் புக்

அண்மைக் காலமாகப் பேஃஸ் புக்கில் பாதுகாப்புத் தன்மை குறைந்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் UpGuard நிறுவனமானது இணையப் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்ட ஆராய்ச்சியில், பேஃஸ்புக்கின் பல தகவல்கள் அமேசான் நிறுவனத்தின் கிளவுட் சேர்வரில் இருப்பதாக கண்டறிந்துள்ளனர். சுமார் 146 ஜிகா பைட்கள் வரையில் இருக்கும் இவை 540 மில்லியன் பயனர்களின் தகவல்களாக இருக்கக்கூடும் என நம்பப்படுவதோடு அவை எந்த ஒரு நபரினாலும் பயன்படுத்தக்கூடியவாறு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளமை அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

## ஓ...ரசிக்கும் சீமானே..!!

"அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்" என்பது பழமொழி, இது பலமுறை நாங்கள் எங்களுடைய சமூகத்தில் கண்ட ஒரு உண்மையும்கூட. திடீரென ஒருவரிடம் பணம் வந்து குவிந்தால் அவருடைய நடத்தையில் பாரிய மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கும். ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்கள் வழமையான நிலைக்குத் திரும்பி விடுவார்கள். இதுபற்றி ஆபிரிக்காவின் மிகப்பெரும் கோடீஸ்வரரான அலிகோ டங்கோட் கூறுகையில், தான் சம்பாதிக்க ஆரம்பித்த காலத்தில், வங்கியிலிருந்து 10 மில்லியன் டொலரை எடுத்து தனது காரின் கீழ் பக்கத்தில் வைத்து கொண்டு சென்று, அந்தப் பணத்தை தனது வீட்டின் அறையில் வைத்து நன்றாக ரசித்ததாகவும், அது பணம் தான், காகிதம் கிடையாது, தன்னிடம் பணம் உள்ளது என்பதை உணர்ந்ததாகவும், பின்னர் அடுத்தநாள் அந்தப் பணத்தை வங்கிக்குக் கொண்டு சென்றுவிட்டதாகவும் கூறினார். இப்படி பணத்தைப் பார்த்து ரசிக்கும் விநோதப் பழக்கமும் பலரிடம் இருக்கத்தான் செய்கிறது.


## 48 வருட கடவுச்சொல்




கையடக்கத்தொலைபேசிகள் ஒருவரின் ஆறாவது விரலாக இருப்பது போல தான் இந்த 'ஐ-பாட்'களும் ஏழாவது விரலாக மாறிவிட்டன.. அநேகமான சிறுவர்களின் விளையாட்டுப் பொருளும் இதுதான். அந்தவகையில் அமெரிக்காவின் பிரபல பத்திரிகையொன்றின் ஆசிரியரான இவான் ஆஸ்நாஸ் என்பவரின் 'ஐ-பாட்'டை அவரது 3 வயது குழந்தை விளையாட எடுத்த போது அதன் கடவுச்சொல் தெரியாததால் பலமுறை, திறக்க செய்த முயற்சியின் விளைவாக அந்த 'ஐ-பாட்' 48 வருடங்களுக்கு முடங்கியுள்ளது. இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட இவான், நண்பர்களின் உதவியைக் கோரியுள்ளார். இந்த நிலையில் பலரும் தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் டுவிட் செய்து வருகின்றனர்.



# முட்டாள்தன முடிவு




பூமியில் ரொம்பக் காலத்துக்கு முன்னால் ஊர்வன, அதிலும் குறிப்பாகப் பெரிய ஊர்வன மட்டுமே ஒரு ஊரில் வாழ்ந்துவந்தன. அந்த ஊரின் பெயர் பாம்புப்பட்டி. பெரிய ஊர்வன என்றால் முதலை, ஆமை, பாம்பு, ஓணான் போன்றவை எல்லாம் அந்த ஊரில் வசித்து வந்தன.

அந்தப் பாம்புப்பட்டியில் ஒவ்வொரு மாதமும் பஞ்சாயத்துக் கூட்டம் நடைபெறும். பாம்புகள், ஆமைகள், ஓணான்கள், முதலைகள் என எல்லாமே இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும். காட்டிலேயே பெரிய முதலையாக இருந்த மகரன்தான் அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும்.

ஒரு நாள் வித்தியாசமாக ஒரு விஷயம் நடந்தது. மாதக் கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு வாரம் முன்னதாக, ஆமைகள் எல்லா வற்றுக்கும் மகரன் ஒரு கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் ஆமைகள் இனிமேல் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று அது உத்தர விட்டிருந்தது.

அந்தக் காட்டில் ஆமைகளின் எண்ணிக்கை ரொம்பக் குறைவுதான். மகரனுடைய உத்தரவை மீறி அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள எந்த ஆமைக்கும் தைரியம் வரவில்லை. ஆமைகளைத் தவிர, மற்ற எல்லா உயிரினங்களும் வந்திருந்தன.

கூட்டத்துக்கு வந்த மகரன் "நண்பர்களே" என்று சத்தமாகப் பேசத் தொடங்கியது. "இனிமே இந்த ஆமைகள் காட்டுக்குத் தேவையில்லை. ஆமைகள் எல்லாம் பாம்புப்பட்டியை விட்டு வெளியேறித்தான் ஆகவேண்டும்." என்று மிரட்டுவதுபோல மகரன் பேசியது.

மகரன் சொன்னது போலவே, அடுத்த வாரத்தில் அந்தக் காட்டில் ஒரு ஆமைகூட இல்லை. மற்ற உயிரினங்களுக்கு முதலில் வருத்தமாக இருந்தது. ஆனால், மகரன் சொன்னது உண்மை என்பதுபோலவும் தோன்றியது. நிறைய உணவு, நிறைய தண்ணீர், நிறைய இடம் எல்லாமே கிடைத்தன. ஆனால், அதெல்லாமே சில நாட்களுக்குத்தான்.

அதற்குப் பிறகு, ஒரு கெட்ட வாடை காட்டுக்குள் பரவத் தொடங்கியது. ஏதோ அழுகியது போன்ற ஒரு வாசனை. பார்க்கிற இடமெல்லாம் அழுகிப் போன பழங்கள் கிடந்தன. ஆற்றில் செத்துப் போன உயிரினங்களின் சடலங்கள் அழுகி மிதந்தன. ஏன் இப்படியெல்லாம் நடந்தது? இவ்வளவு நாள் இதையெல்லாம்தான் அந்த ஆமைகள் சாப்பிட்டு வந்தன. உத்தரவு போட்ட மகரனே, தன்னுடைய மூக்கை மூடிக்கொண்டு தான் காட்டில் நடமாடிக்கொண்டு இருந்தது.

இப்படியே ஒரு மாதம் ஓடியது. அடுத்ததாக, பாம்புகளுக்கு வினை வந்தது. பாம்புகள் எல்லாம் பாம்புப்பட்டி காட்டைவிட்டு வெளியேறின. சில வாரங்களுக்குப் பிறகு, பாம்புப்பட்டி காட்டில் வாழ்ந்த உயிரினங்கள் ரொம்பவும் சோர்ந்தும் அலுத்தும் போயிருந்தன. எலிகளைச் சாப்பிடக்கூடிய பாம்புகள் வெளியேறிவிட்டதால், அந்தக் காட்டில் எங்கே பார்த்தாலும் எலித்தொல்லை அதிகமாகியிருந்தது. ஓணான்களின் முட்டைகளையும் முதலைகளின் முட்டைகளையும் எலிகள் சாப்பிட்டுவிட்டன.

இது எல்லாவற்றுக்கு அப்புறமும் மகரனுக்கு ஒரு புது யோசனை தோன்றியது. அதன்படி முதலைகள் மட்டுமே பங்கேற்ற ஒரு கூட்டத்துக்கு அது ஏற்பாடு செய்தது. "இந்தக் காடு முழுதும் நமக்கு மட்டுமே, முதலைகளுக்கு மட்டுமே சொந்தம். நம்மைத் தவிர வேற யாரும் இந்தக் காட்டில் இருக்கக் கூடாது. ஓணான்கள் எல்லாவற்றையும் விரட்டிடுவோம்" என்று மகரன் சொன்னது.

அந்த நேரத்தில் மகரன் சொல்வதை எல்லாம் அப்படியே கேட்கவும் நம்பவும் அவை பழகியிருந்தன. அதனால், "வாழ்க, வாழ்க. முதலை குலத் தலைவன் வாழ்க" என்று முதலைகள் கோஷம் இட்டன. ஓணான்களும் காட்டை விட்டு வெளியேறின.

இப்போது முதலைகளின் வாழ்க்கை செழிப்பாகவும் சிறப்பாகவும் மாறியிருக்க வேண்டும், இல்லையா? ஆனால், அதற்குப் பிறகுதான் எல்லாமே குழப்பமானது. யாரோ ஒரு புத்திகெட்டவன் காட்டுக்குள் நுழைந்து, எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டது மாதிரி பாம்புப்பட்டி மாறிவிட்டது.

ஓணான்கள் இல்லாமல் போனதால், அந்தக் காட்டில் பூச்சிகள் லட்சக்கணக்கில் பெருகியிருந்தன. அவை பெரிது பெரிதாக வளர்ந்து தொல்லை கொடுக்க ஆரம்பித்தன.

முதலைகளுக்கு அந்தக் காடு பயங்கரமான இடமாக மாறிவிட்டது.

அடுத்த மாதாந்திரக் கூட்டத்தில் "நம் காடு ஏன் இப்படி ஆனதென்று எல்லாருக்கும் தெரியும் தானே?" என்று ஒரு முதலைக் குட்டி தைரியமாகக் கேள்வி கேட்டது. தான் எடுத்த எல்லா முடிவும் தப்பாகிவிட்டது என்பதை ஒப்புக்கொள்ள மகரன் விரும்ப வில்லை. அதேநேரம், இப்ப யாரும் மகரனைப் பார்த்துப் பெரிதாகப் பயப்படவில்லை. எப்பொழுதும் பயந்துகொண்டே இருந்தால், எந்த நல்ல விஷயமாவது நடக்குமா?

அதனால், மற்ற முதலைகள் எல்லாம் கூடி முடிவெடுத்து, காட்டைவிட்டு வெளியேறிய உயிரினங்கள் எல்லாம் காட்டுக்குத் திரும்ப வர வேண்டும் என்று அவசரத் தகவல் அனுப்பின. ஆமைகள், பாம்புகள், ஓணான்கள் என அனைத்து உயிரினங்களுக்கும் தகவல் அனுப்பப்பட்டது. அந்த உயிரினங்களும் குடும்பம் குடும்ப மாக காட்டுக்குத் திரும்பி வந்தன.

இது எல்லாம் நடந்து இரண்டு மாதங்களில், காடு தன் இயல்புக்குத் திரும்பத் தொடங்கியது. பூச்சிகள், எலிகள், தவளைகள், அந்தக் கெட்ட வாடை எல்லாமே காட்டைவிட்டுப் போய்விட்டன. அந்தப் பாம்புப்பட்டி காடு முன்பு போலவே இப்போது மாறிவிட்டது. நீங்கள் நேரில் போனாலும் அதை உணர முடியும்.

# காட்டு ராஜா



சிங்கங்கள் தங்களைக் காட்டு ராஜாவாக இதுவரை அறிவித்துக் கொண்டதில்லை. மற்ற விலங்குகளும் சிங்கத்தைக் காட்டு ராஜாவாகத் தேர்ந்தெடுக்கவில்லை. காட்டு ராஜா என்ற பட்டத்தைச் சூட்டியவர்கள் மனிதர்களே! சிங்கம் அடர்ந்த காட்டுக்குள் வாழ்வதில்லை. அடர்த்தி குறைந்த பகுதிகளில்தான் வாழ்கின்றன. சிங்கத்தின் உருவம் வசீகரிக்கக்கூடியதாகவும் அதன் நடை கம்பீரமாகவும் இருப்பதால், சிங்கத்தைக் காட்டு ராஜாவாக மாற்றிவிட்டார்கள். ஒரு காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் சிங்கங்களே அதிகமாக இருந்தன. அதனால் அவர்கள் கதைகளில் சிங்கத்தை ராஜாவாகச் சித்தரித்து எழுத ஆரம்பித்துவிட்டனர். அது அப்படியே பிற நாடுகளுக்கும் பரவிவிட்டது.

# குருதியின் நிறம் சிவப்பா?

கொசுவை அடித்தாலும் எறும்பை அடித்தாலும் சிவப்பாக இரத்தம் வராது. பூச்சிகளில் இருக்கும் உயிர் திரவத்துக்கு, 'குருதிநிணம்'(Hemolymph) என்று பெயர். இதில் பல்வேறு சத்துகளும் ஹோர்மோன்களும் மற்றும் சில பொருட்களும் இருக்கின்றன. இந்தத் திரவத்தில் சிவப்பணுக்களோ ஈமோகுளோபினோ கிடையாது. இதனால் நம் இரத்தத்தைப்போல் அது சிவப்பாக இருக்காது. சில நேரத்தில் பூச்சிகளின் இரத்தம் வெளிர் மஞ்சளாகவும் வெளிர் பச்சையாகவும் தெரியும். பூச்சிகள் அப்போது எந்தத் த்தாவர உணவைச் சாப்பிட்டிருக்கின்றன என்பதைப் பொறுத்து இந்த நிறம் உண்டாகும். மற்றபடி பூச்சிகளின் இரத்தத்துக்கு நிறமில்லை. ' ஆனால், கொசு உங்கள் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்த பிறகு, நீங்கள் அடித்திருப்பீர்கள். அதனால் சிவப்பாக இரத்தம் இருந்திருக்கும். உங்கள் இரத்தம் அதன் வயிற்றில் ஜீரணமாகமல் இருப்பதாலேயே அது சிவப்பாக இருக்கிறது. மற்றப்படி பூச்சிகளுக்கு இரத்தம் சிவப்பாக இருக்காது.


# கரிக்கும் கடல் நீர்

மழை நீர் நிலத்திலுள்ள பாறைகளையும் மண்ணையும் அரித்துக்கொண்டு செல்லும் போது, அவற்றிலுள்ள உப்புகள் நீரில் கலந்து விடுகின்றன.

காற்றில் உள்ள கரியமில வாயுவும் தண்ணீரோடு சேர்ந்துவிடுவதால், தண்ணீர் சற்று அமிலத் தன்மை உடையதாக மாறிவிடுகிறது. இந்த நீர் ஆறுகளாகி, வழியில் உள்ள மணல், பாறைகளைக் கரைத்துக்கொண்டு, கடலில் சென்று கலந்துவிடுகிறது. இதனால் தண்ணீரில் உப்பு இன்னும் அதிகமாகிவிடுகிறது.

கடலுக்குள் இருக்கும் எரிமலைகளில் இருந்து வெளியேறும் உப்புக் கனிமங்கள் தண்ணீரை இன்னும் உப்பாக மாற்றிவிடுகின்றன. கடல் நீரில் சோடியமும் குளோரைடும் அதிக அளவில் இருப்பதால், கடல் நீர் கரிப்பாக இருக்கிறது.

# மே தின 'மாஸ்'



ஊழியப்படையணியின் உரிமைக்குரல் விண்ணதிர முழங்கும் விடுதலை நாளே மேதினம். அடிமைகளாக வலம்வந்து வீழ்ந்தே வாழ்ந்து மடிவதைவிட, தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்ற இலட்சியத் தீயை தொழிலாளர்கள் மனங்களில் மூட்டிவிடும் புரட்சி நாள் அது.

மே தினத்துக்கு இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ள நிலையில், மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது தடல், புடலாக இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஜனாதிபதித் தேர்தலுக்கான முதலாவது பரப்புரைக் கூட்டமாகவே மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் நடத்தவுள்ளன. மைத்திரி அணியும் தனிப் பலத்தைக் காட்டுவதற்குத் தீயாக வேலைசெய்து, திட்டம் வகுத்து வருகின்றது.

சித்திரைப் புத்தாண்டு மலர்ந்துள்ளதால் அரசியல் பிரமுகர்கள் பலர் தமது சொந்த ஊரில் இருக்கின்றனர். மேலும் சிலர் விடுமுறைக் காலத்தை கழிப்பதற்காக வெளிநாடு பறந்துள்ளனர். எனவே, ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு பின்னரே கொழும்பை நோக்கிப்படையெடுப்பார்கள். அதன்பிறகு கொழும்பு அரசியல் களம் பரபரப்பாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தலைமையில் அவரவர் சார்ந்த கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்படி மஹிந்த அணியின் கூட்டம், நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் அலுவலகத்திலும், சுதந்திரக்கட்சியின் கூட்டம் ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ இல்லத்திலும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேடக் கூட்டம் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது. ஏப்ரல் 25 ஆம் திகதிக்குள் குறித்த சந்திப்பு இடம்பெறலாம் என அக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியூதின், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக்க ரணவக்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, அர்ஜூன ரணதுங்க, சரத் பொன்சேகா ஆகியோரும் மேற்படி சந்திப்பில் கலந்துகொள்வார்கள் என தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினராக இருக்கின்றபோதிலும், சபாநாயகராக பதவியேற்ற பின்னர் அக்கட்சி சார்ந்த கூட்டங்களில் பங்கேற்பதை கருஜயசூரிய தவிர்த்து வந்தார். எனினும், குறித்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததென்பதால் கட்டாயம் பங்கேற்குமாறு கோரப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதனுடன் கூட்டணி வைத்துள்ள பங்காளிக் கட்சிகளும் இணைந்து தேசிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளன. இக்கூட்டணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே தலைமை தாங்கும். இது குறித்தான அறிவிப்பு மே முதலாம் திகதி உத்தியோகப்பூர்வமாக வெளியிடப்படவுள்ளது.

இக்கூட்டம் முடிவடைந்த கையோடு ஐக்கிய தேசியக்கட்சியுடன் விசேட மத்தியசெயற்குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. உள்ளிட்ட கட்சிகளும் இம்முறை, தேர்தலை குறிவைத்தே மே தின நிகழ்வுகளை மேடையேற்றவுள்ளன.



# அன்று மஹிந்த, இன்று கோத்தா

இறுதிக் கட்டப்போரின்போது வெளிநாடு பறந்திருந்த அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, போர் முடிவடைந்த கையோடு, வெற்றிக்கொண்டாட்டங்களுக்காக மின்னல் வேகத்தில் நாடு திரும்பினார்.

விமான நிலையத்தில் வந்திறங்கியதும், மண்டியிட்டு தாய்மண்ணை தொட்டுவணங்கி முத்தமிட்டு, தேசப்பற்றை வெளியுலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டும் காட்சியை இனிதே அரங்கேற்றினார் சிங்கள மக்களால் 'அப்பச்சி' என அழைக்கப்படும் மஹிந்த.

அதுமட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அணிதிரண்டுவந்து, மஹிந்தவை 'இறுக்கி அணைத்து உம்மா' கொடுத்து, மாலை அணிவித்து - பொன்னாடைப்போத்தி 'வேறு லெவலில்' கவனிப்பு செய்து, அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக்கொண்டனர்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச வெற்றிபெறுவதற்கு, விமான நிலையத்தில் அவர் மண்டியிட்டு, மண்ணுக்கு முத்தமிட்ட காட்சி பெரும் பங்களிப்பை வழங்கியது. அதை மையப்படுத்தியே விளம்பரங்களும் செய்யப்பட்டன.

இந்நிலையில் சுமார் 10 ஆண்டுகளுக்கு பின்னர் - கிட்டத்தட்ட அதேபோன்றதொரு சம்பவம் மீண்டும் அரங்கேறியுள்ளது.

அமெரிக்க குடியுரிமையை துறப்பதற்காக அண்மையில் அந்நாட்டுக்கு பறந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஏப்ரல் 12 ஆம் திகதி நாடு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் காலடி வைத்ததும் அவருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இறையாசிக்காக சர்வமதத் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

வி.ஐ.பி. பகுதியிலிருந்து வெளியேறிய கோத்தாவுக்கு பஞ்சவர்ண மாலைகளை அணிவித்து, தாமரை மொட்டுகளில் வடிவமைக்கப்பட்ட பூங்கொத்தை வழங்கி உற்சாக வரவேற்பளித்தனர் கூட்டு எதிரணி எம்.பிக்கள்.

அவர்களால் அழைத்துவரப்பட்டிருந்த ஆதரவாளர்களும், 'எதிர்கால ஜனாதிபதியே வாழ்க... வாழ்க' என கோடை வெயிலையும் பொருட்படுத்தாது தொண்டைக் கிழியுமளவுக்கு கோஷமெழுப்பினர்.

அதுமட்டுமல்ல கோத்தாவைக் கட்டியணைந்து, அன்று மஹிந்தவுக்கு எப்படியோ அதற்கு நிகரான வகையில் அரசியல் பூஜைசெய்து ஆலவட்டம் பிடித்தனர். அதாவது, அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாயதான் என்பதை அந்த வரவேற்பு நிகழ்வு இன்னொரு முறை உறுதி செய்துள்ளது.




# 'அம்மா சத்தியமா நானும் அரசியல்வா(ந்)தி!"

ஓவர் நைட்டில் ஒபாமா ஆவதற்கு பலதடவைகள் முயற்சித்தும் இன்னும் பலனேதும் கிட்டாததால் கடுப்பில் இருக்கிறாராம் அந்த சிவப்பு தொப்பி அரசியல்வாதி.

வேங்கை மகன் ஒத்த ஆளாக நின்று கட்சியை வழிநடத்தினாலும் வெளியுலகுக்கு அதை காட்டிக்கொள்வதே இல்லை. கட்சிக்கு மத்தியகுழு, நிறைவேற்றுக்குழு, இளைஞர் அணியென பல பிரிவுகள் இருப்பதாக அறிவித்து

'பில்டப் அரசியல்' நடத்திவரும் அவரின் மனநிலை"அம்மா சத்தியமா நானும் அரசியல்வாதி தாங்க ப்ளீஸ் பிளீவ் மீ ':ஐ யம் பாவம்" என்பதுபோல்தான் உள்ளதாம்.



அதுமட்டுமல்ல எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் கண்பட்டுவிடும் என்பதால், தமது கட்சி அங்கத்தவர்களின் விபரங்களை இன்னமும் மர்மப்பட்டியலாகவே வைத்துள்ளாராம்.

தான் எப்படியாவது பேமஸாகிவிட வேண்டுமென்பதற்காக 'ரூம்' போட்டு யோசிக்கும் இவர், பரபரப்பாக எதையாவது பேசினால் அது ஊடகங்களில் தலைப்பு செய்தியாகிவிடுமென நினைத்து - பலதடவைகள் சர்ச்சைக்குரிய கருத்துகளை அள்ளிவீசியிருந்தாலும் அதை ஊடங்கள் கண்டுகொள்ளாதது இவருக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இதனால், ஊடகவியலாளர்களை, 'மஞ்சர் கவர் ஜேர்னலிஸ்ட்' என விமர்சித்து வருவதுடன், தற்போது பேஸ்புக்கில் தன் அறிக்கைகளை அதிரடியாக வெளியிடத் ஹொடங்கியிருக்கிறாராம்.

# நாம் வாழும் பூமி நமதே!



● வேதநாயகம் தபேந்திரன்

“சரியான வெயில். தாங்கவே முடியவில்லை.”

எந்தப் பக்கம் திரும்பினாலும் இந்தச் சொற்கள் தான் இன்றைய நாளில் காதில் கேட்கிறது. இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம். சூழல் எமக்குக்கற்றுத் தந்த பாடம் இது தான்.

மண் திண்ணை, கிடுகு அல்லது பனையோலையால் வேய்ந்த வீடுகளில் மிகவும் குளிர்ச்சியாக வாழ்ந்த தலைமுறை கிட்டத்தட்ட விடைபெறும் நிலைக்கு வந்து விட்டது.

வீட்டைச் சுற்றி நாலுபுறமும் மரங்கள் இருக்கும். மர நிழலில் கயிற்றுக் கட்டில் போட்டு அல்லது ‘ஈசிச் செயார்’ போட்டு நிழலில் ஆறுதலாக இருந்து குடும்பத்துடன் குதூகலமாக இருந்த பொழுதுகள் எம்மிடம் கிட்டத்தட்ட விடைபெற்று விட்டது. காடுகள் பல அழிக்கப்பட்டு கழனிகளாகவும் குடியிருப்பு நிலங்களாகவும் ஆக்கப்பட்டு விட்டன.

நாடு ஒன்றின் நிலப் பரப்பில் காடு கொண்டிருக்க வேண்டிய சதவீதம் பேணப்படவில்லை. விளைவு நாடு மனிதன் வாழ முடியாத நரக வீடாகிக் கொண்டு போகிறது.

மின்சாரம் மனித வாழ்வின் மகத்தான கண்டுபிடிப்பு என்றார்கள். காற்றலை வரிசையில்வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, இணைய அலைகள் வந்தமை மகத்தானது என்றார்கள். ஆனால் தேவைகள் குறைவாக இருந்து நிம்மதியாக வாழ்ந்த மனிதவாழ்வை அவை தொலைத்து விட்டன போலத் தான் இருக்கிறது. உலகத்து நவீனங்கள் எல்லாம் மலிவு விலையில் உள்வீட்டினுள் ஏன் உள்ளங்கைகளில் வந்து விட்டது. வாழ்வது சுகமாகி விட்டது. ஆனால் வாழ முடியாமல் வந்து விட்டது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனித குலத்துக்குக் கற்றுத் தந்த பாடம் இது தான். போர் தந்த நன்கொடைகளில் ஒன்று வீட்டுத் திட்டம். ஏழைகள், ஏழைகளாகத் தம்மைப் பாசாங்கு காட்டிக்கொண்டோர் பல்லாயிரம் பேர் கல் வீடு கட்டி வாழ்கின்றனர். ஏழைகளின் கல்வீட்டுக் கனவு நிறைவேறுவது மகிழ்ச்சி தானே.

போர் தந்த புலம் பெயர்வு புதுப் பணக்கார வர்க்கம் ஒன்றை பல்லாயிரக் கணக்கில் உருவாக்கி விட்டது. கல்வீட்டு கந்தையா, பெரிய வீட்டு கணபதிப் பிள்ளை, உடையார்காசிப்பிள்ளைவம்சங்கள் மட்டுமே பணக்காரராக இருந்த வாழ்வு விடைபெற்றுப்போனது. விளைவு கல்வீடு வாசல் மதில்கள், முற்றத்தில் முன் வளவு, பின்வளவு எங்கும் கொங்கிறீற் மயம். மரங்கள் எமக்கு குளிர்மை தந்தது. கூடவே மழையும் தந்தது. நாம் அதன் காய்களை உண்டோம். பழங்களை உண்டோம். ஏன் இலைகளையும் உண்டோம். அதன் மரங்களை தளபாடங்களாக்கினோம். அதன் ஓலைகளைக் கூரைகளாக்கினோம். அதை மருத்துவத்துக்கும் பாவித்தோம். அதன் நிழலில் ஒதுங்கினோம்.

அதன் இலைகுழைகளை விவசாயத்துக்கு இயற்கைப் பசளையாக்கினோம். மரங்களைச் சொத்தாகக் கருதினோம். மரங்களுக்கும் எங்களுக்கும் உயிர்ப்பு உள்ள ஒரு உறவு இருந்தது. மாதம் மும்மாரி பொழிகிறதோ இல்லையோ பருவம் தப்பாமல் மழை பொழிந்தது. வானம் பொய்க்காத வாழ்க்கை வாழ்ந்தோம்.

வயல்கள், தோட்டங்களுடன்பிணைந்த இயற்கை வாழ்க்கை குறைவிலாத ஆரோக்கியத்தைத் தந்தது. தோட்டங்கள் மட்டுமல்ல வீட்டுத் தோட்டங்கள் கால்நடை வளர்ப்பு என வனப்புமிக்க மனநிறைவான வாழ்க்கை ஒன்றின் சொந்தக்காரராக இருந்தோம். பணவசதி கூடக் கூட மனிதன் மாறிவிட்டான். மரங்களை அழித்து வசதியைக் கூட்டும் பழக்கம் வந்தது. பயன்தரு மரங்களை அழித்து விட்டு பூ மரங்களை நட்டு அழகு பார்க்கிறான். வீடு கட்டுவது மனிதனின் அடிப்படைத் தேவை அதை யாரும் மறுக்க முடியாது. வருவாய் தந்த எல்லை வேலிகளை அடைக்க ஆள்கள் இன்றி அழித்து விட்டு மதில்கள் கட்டுகின்றார்கள்.

வீட்டைச் சுற்றி நான்கு புறமும் இருந்த வேலிகளை அழித்து விட்டு மதில்கள் கட்டும் போது உள்ளூராட்சி அமைப்புகளிடம் அனுமதி பெறப்படுவது மிகவும் குறைவு. அழிக்கப்பட்ட வேலி மரங்களுக்குப் பதிலாக மரங்களை நடுவோர்கள் ,கால்வாசிப்பேரும் வர மாட்டார்கள். வளவு கூட்டுவதற்கு நேரமில்லை. கஷ்டம் என்று சொல்லி விட்டு மண்ணுக்கு மேல் கொங்கிறீற் போட்டு சீமெந்து பூசி அழகு பார்க்கின்றனர். வீட்டு வளவு வேலைகள் செய்ய நேரமில்லை. ஆனால் அட்டவணை தவறாத தொடர்நாடகங்கள் பார்க்க பலருக்கு நேரமுண்டு. இருவர் உழைத்தால் தான் இந் நாளில் பசி தீரும். ஆணும், பெண்ணும் ஓடியோடி உழைக்கத் தான் நேரம் போதும். சூழலை கொங்கிறீற் காடாக்கி விட்டு மனிதன் வீட்டுக்குள் முடங்கப் பழகி விட்டான். இங்கே தான் அவலம் தொடங்குகிறது.

இயற்கையாக கிடைக்கக் கூடிய இதமான காற்று வர வழிகள் இல்லை. வெப்பக் காற்று வளவு முழுவதையும் வியாபித்துக் கொள்ளும். வீட்டினுள் எந்த நேரமும் மின்விசிறி சுழன்று கொள்ளும். 500 ரூபா மின் கட்டணம் வரக் கூடிய வீடும் 1500 ரூபா முதல் 5000 ரூபா வரை மின்கட்டணம் வரும் வீடாக மாறிவிடும். இதனை விட அரச, தனியார் அலுவலகங்கள், வியாபார நிலையங்கள் யாவும் குளிரூட்டப்படுவதும் பரவலாக நிகழ்கிறது.ஏன் வசதி உள்ள வீடுகளும் ஏசி ( Air condition ) உள்ள வீடுகளாகி விட்டன. குளிரூட்டும் இயந்திரங்கள் உள் வெப்பத்தை உறிஞ்சி வெளியே விடுகின்றன. அவ்வாறு வரும் வெப்பம் சூழல் வெப்பத்தை மேலும் கூட்டுகின்றது. வீட்டைச் சுற்றி மதில்கள் கட்டுவோர் அதற்குப் பதிலாக மரங்களை நட வேண்டுமென்ற சட்டங்கள் எதுவும் இங்கு இல்லை.

இந்தியாவில் கர்நாடகா மாநிலத்தில் மரங்கள் அழிக்கப்படாமல் பசுமை பேணப்படுகின்றது. பசுமை பேணலுக்கு முன் உதாரணமான மாநிலம் அது. அங்கு ஒருவர் வீட்டைக் கட்டுவதற்கு நிலம் தேவையாக இருந்தாலும் மரத்தை அழிக்காமல் அதனை ஒருங்கிணைத்துத்தான் கட்டடத்தைக் கட்ட முடியும். மரங்களை அழிப்பது என்பது அங்கு இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. காலாதி காலம் வரும் மாநில அரசுகள் சூழல் பேணலுக்கு மிகுந்த முதன்மையைச் செயலளவில் காட்டுகின்றார்கள். வளர்ந்த நாடுகளைப் பார்ப்போமாயின் அங்கு மரங்களை அழிப்பது என்பது பாரதூரமான குற்றம். மரங்கள் நாட்டின் வளங்கள் என்பது அங்கு சட்ட ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் அதிகார சபையின் சாத்திய வள அறிக்கை பெறப்பட்டு சதுப்பு நிலங்களில் தான் கட்டடங்கள் அமைக்க முடியும். உற்பத்தி திறன் மிக்க நிலங்களில் கட்டடம் கட்டுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது. சதுப்பு நிலங்களில் பல அடுக்குத் தொடர்மாடிகளைக் கட்டுவார்கள். ஒரேயிடத்தில் பல்லாயிரக்கணக்கில் மனிதர்கள் குடியமர்த்தப்படுவார்கள். அங்கு வைத்து அவர்களுக்குரிய போக்குவரத்து, பாடசாலை, உயர்கல்வி, மருத்துவவசதிகள், வங்கி, காப்புறுதி சேவைகள், பல்பொருள் அங்காடிகள், பொழுது போக்கு வசதிகள் யாவும் வழங்குகின்றார்கள். பல இடங்களில் மனிதர்களைக் குடியிருக்க அனுமதித்து நிலங்களையும், மரங்களையும் விரயமாக்கும் தன்மை அங்கு தடுக்கப்படுகிறது. நகரமயமாக்கம் என்பது மிகவும் ஒழுங்கமைந்து நடைபெறுகிறது. அரசியல்வாதிகள் ஊடுருவி நாட்டை நாசமாக்க முடியாது. அரசியலமைப்பு ஏட்டளவிலும் செயலளவிலும் திறமையாகவே உள்ளது. அதனால் சூழல் பாதுகாப்பு பேணப்படுகிறது.

ஆனால் எமது நாட்டில் தூரநோக்கான சிந்தனைகள் வெறும் சட்டப் பேப்பராகவும், காகிதச் சுற்றுநிருபங்களாகவுமே உள்ளன. அரசியல் தலையீடுகள், குடிமக்களின் பொறுப்புணர்வு இன்மை பலமாகத் தலைவிரித்து ஆடுகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக இயங்குகிறது. அதன் அனுமதி பெற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறைமை வரவேற்கத்தக்கது. ஆனால் மரங்களை நட்டு சூழலை பசுஞ்சோலையாக வைத்திருக்க வேண்டுமென்ற விழிப்புணர்வு பொதுமக்கள் மத்தியில் மிகவும் குறைவாகவே உள்ளது. விடுதலைப் புலிகளின் காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பாராட்டக் கூடிய விதத்தில் இருந்தன.

அவர்கள் சூழலை அழிப்போர் தொடர்பில் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றினார்கள். வீதியோரங்களில், சதுப்பு நிலங்களில் மரங்களை நட்டுச் சூழலைப் பேணினார்கள். வடமராட்சி கிழக்கு மணற்காடு சவுக்குத் தோப்பு அவர்களது முயற்சியால் உருவானது. அவர்களுக்குப் பின் வந்த காலத்தில் மரம் நடுகை பெரும் பயனுள்ளதாக நடைபெற்றது மிகவும் குறைவு. யாழ்ப்பாணத்தில் மிக அண்மையில் ஒரு பிரதேச சபைத் தலைவரால் அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டது. தமது பகுதியில் மரம் ஒன்றைத் தறிப்பதற்கு அனுமதி பெற்றவர் 3 மரங்களை நட வேண்டுமென அறிவித்தல் விடுத்தார். அனுமதி பெற்ற ஒருவர் 3 மரங்களை நடுகிறார் என வைப்போம். ஆனால் அவை வளர்ந்து பயன்தரும் நிலையை அடையும் காலம் வரை பராமரிக்கப்படுவதற்கான உத்தரவாதம் என்ன? திட்டங்களை அறிவிப்பது மிகவும் இலகுவானது. அவை நடைமுறைப்படுத்துவதற்கான தொடர் கண்காணிப்புகள் என்ன? என்பது தொடர்பாக சரியான நடைமுறை இல்லை. பொதுமக்களும் "இது எங்களது இயற்கை. இதை நாங்கள் தான் பாதுகாக்க வேண்டும்" என்ற நோக்கமின்றி உள்ளனர். சுருக்கமாகச் சொன்னால் தாய் நாட்டை நேசிக்கும் பண்புள்ள மக்கள் சமூகம் கட்டி எழுப்பப்படவில்லை.

அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கண் மண் தெரியாத மர அழிப்பு நாடெங்கும் மிகவும் தாராளமாகவே நடக்கிறது. சூழல் சமநிலை பேணப்படுவதற்குரிய உறுதிப்படுத்தல்கள் பெரியளவில் பின்பற்றப் படுத்தப்படுவதில்லை. பசுமைபேணும் திட்டங்களுக்கு விழாக்கள் எடுப்பதோ ஜூன் 05 ஆம் திகதி சர்வதேச சுற்றுச் சூழல் தினத்தை விமரிசையாகக் கொண்டாடுவதோ பூகோளத்தின் வெப்ப அதிகரிப்பை நிறுத்தப்போவதில்லை. நாம் வாழும் பூமி எமது என்பதை நாம் யாவரும் உயிரும் உணர்வுமாகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். ■

**இந்தியாவில் கர்நாடகா மாநிலத்தில் மரங்கள் அழிக்கப்படாமல் பசுமை பேணப்படுகின்றது. பசுமை பேணலுக்கு முன் உதாரணமான மாநிலம் அது. அங்கு ஒருவர் வீட்டைக் கட்டுவதற்கு நிலம் தேவையாக இருந்தாலும் மரத்தை அழிக்காமல் அதனை ஒருங்கிணைத்துத்தான் கட்டடத்தைக் கட்ட முடியும். மரங்களை அழிப்பது என்பது அங்கு இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை.**

# ஈரநிலம்

நிலம் 14

● ஆத்மீ

யுத்தத்தின் கோர ஒலமும் ஒப்பாரிகளின் எச்சங்களும், எங்கோ பாலைவன தேசமோ எண்ணத் தோன்றியது. அந்தளவுக்கு அகோரமாய் சூழல் மாறிக்கிடந்தது.

அப்பொழுதுதான் அந்த சாரம் தீரனின் பார்வையில் பட்டு, அது தாயகனென அடையாளம் காட்டிக்கொடுத்தது.

திகைப்பு ஒட்டிக்கொள்ள என்ன செய்வதென்று தெரியவில்லை தீரனுக்கு. "கடவுளே.. இது தாயுவா இருக்கக் கூடாது. பாவம்.. என்ன செய்ய? அவனா இருக்காது..." ஒரு நம்பிக்கை உள்ளூர ஒட்டிக்கொள்ள, தாமதிக்காமல் ஓடிச் சென்றான்.

எரிந்தும், கிழிந்தும் கிடந்த சிதறல்கள் நடுவில் பங்கரை நோக்கி ஓடினான். எங்கோ அவனது காலிலும் ஏதோ அறுத்துவிட்டதாகத் தோன்றியது. கணுக்காலில் இரத்தக்கசிவோடு, வலியும் உணர்த்தியது. ஆனாலும், அதைக் கவனிக்கும் நிலையில் தீரன் இருக்கவில்லை. தாயகனுக்கு என்னவாயிற்று என்று அறிந்துகொள்ளவதில் மும்முரமானான். கூட இருந்து எல்லா நல்லது கெட்டதிலும் தன்னோடு இருந்த நண்பனாயிற்றே! எப்படி ஏனோ தானோவென்று விட்டுவிட முடியும்?

பங்கரின் வாசலில் உடைந்து கிடந்த தென்னங் குற்றியை விலக்கி விட்டு, உள்ளே எட்டி பார்வையால் துழாவினான்.

ம்ஹூம்.. எதுவும் தென்படுவதாகத் தோன்றவில்லை. பங்கருக்குள் இருட்டும் புகையும் தான் அப்பிக் கிடந்தன. அங்கு எதுவும் தெளிவாய் புலப்படவில்லை.

எட்டிப் பார்த்தவன், எதுவும் தெரியவில்லை என்பதால் உள் நுழையப் பார்த்தான். முட்கம்பிகளும் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கின்றன. அவதானமாக பார்த்து துழாவிக்கொண்டே, சரிந்து கிடந்த மறைப்புக்கு வைத்திருந்த தகரத்தை நகர்த்தினான் தீரன். ஒருவாறு அசைந்து கீழே வீழ்ந்தது.




அங்குதான் ஒரு உருவமும் ஒருக்களித்துக் கிடக்கிறது. உற்றுப்பார்த்தால். வயிற்றுப்பக்கத்தில் இரத்தம் ஓடி காய்ந்திருக்கிறது. அந்தப் பக்கம் அப்படியே உறைந்து கட்டி பத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும், அசைவு தெரியவில்லை. என்ன செய்கிறது என்றும் புரியவில்லை.

அவனையறியாமல் வாய் விட்டுக் கத்தி விட்டான்." தாயு... தாயகன் டேய்.. என்னடா ஆச்சு? " கத்திக்கொண்டே ஓடிச் சென்று இழுத்து நிமிர்த்தினான். பேச்சு மூச்சில்லை. அசைவதாயும் தெரியவில்லை. தூக்கி அசைத்தான். வாய் விட்டுக் கத்தினான்.

"தாயு... எழும்புடா..."

இதயமே வெடித்து விடுவதாய் தோன்றியது. ஐயோ.. யார் வருவார்கள் இப்பொழுது உதவிக்கு? ஆளாளுக்கு தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத்தான் ஓடுகிறார்கள் தவிர, இப்பொழுது எப்படி அடுத்தவர்களை பார்ப்பார்கள்?

வெளியே எட்டிப் பார்த்தவன், "டேய் .. ஆரெண்டாலும் வாங்கோ.. தாயு இங்க கிடக்கிறான். காயப்பட்டுட்டான். மெடிசின் கொண்டு போகோணும். வாங்கோ அண்ணா... டேய், அடேய்... வாங்கோடா" கத்திக்கொண்டே திரும்பவும் கூப்பிட்டுக் கொண்டு தன்னால் முடிந்தளவு தூக்கி நிமிர்த்தினான். நிமிர்த்திக்கொண்டு உள்ளேயே குற்றியில் சார்த்தினான். தாயகன் தான். ஒரு பக்கமாய் ஒருக்களித்து சரிகிறான். மூச்சிருக்கிறது, ஆனாலும், அவனால் நிமிர்ந்திருக்க முடியவில்லை என்பது இவனுக்குப் புரிய, மீண்டும் அவனை தன்னோடு சாய்த்துக்கொண்டு "டேய், ஆரெண்டாலும் ஒராள் வா..." கத்தினான்.

அருகில் யாரும் இதைக் கேட்டு வருவதாய் தெரியவில்லை. அரவமே இல்லை. ஆனாலும், மீண்டும் மீண்டும் சத்தமிட்டுக் கொண்டு, தன்னால் முடிந்தளவுக்கு பலத்தைக் கொடுத்து பங்கர் வாசல் வரைக்கும் தன்னோடு சேர்த்து அணைத்து தூக்கி வந்தான் தீரன். முடியவில்லை ஆனாலும், அவனைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று அவசரப்பட்டான்.

மீண்டும் ஷெல் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆங்காங்கே வீழ்ந்து வெடிக்கிறது. ஆனாலும், யாரும் வருவதாகத் தெரியவில்லை. வாசலில் அவனை சேர்த்து சாய்த்து வைத்துவிட்டு, பங்கரை விட்டு வெளியே வந்தான் தீரன். தூரமாக இவன் கத்தியதைக்கேட்டு, தேடிக்கொண்டிருந்தவர்களில் யாரோ இரண்டு பேர் வருவதாகத் தோன்றியது.

கொஞ்சம் மூச்சை இழுத்து விட்டு, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான் .

கையால் சைகை செய்து அவசரமாக வரச் சொல்லில் விட்டு, பங்கரில் அவனையும் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு கண்ணீரோடு சாய்ந்துகொண்டான் தீரன். உலகமே விரோதியாய் தோன்றியது. எல்லாமே வெறுமையாயும், வலியாகவும் மனதை இறுக்கி இன்னும் அழ வைத்தது.

தன்னையறியாமல் அழ ஆரம்பித்து விட்டான். ஆனாலும் தாயகனை அணைத்த அணைப்பை கைவிட வில்லை.

அப்போது...

(நனையும்..)

# உவங்களை என்ன செய்யலாம்?

இப்ப புதுசாக் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டத்திலை தெரு நாயளின்ரை பெருக்கத்தைத் தடை செய்ய எண்டு ஒரு பெரிய தொகையை அரசாங்கம் ஒதுக்கி இருக்காம். அதின்படி இனிமேல் நாயளைக் கொல்லுறேல்லை எண்டும் ஆக்களைப் ( நாயை ஒருக்கா மரியாதையாச் சொல்லிப் பாத்தனான்) பிடிச்சு அவையளுக்குக் கருத்தடை செய்து விட்டிட்டால் அவைபிறகு என்ன செய்தாலும் குட்டிபோட மாட்டினம். அப்ப தெருவிலை நாயள் ஒட்டமற்றிக்காக் குறையும் எண்டு அவை நினைக்கினம். அதின்படி யாழ்ப்பாண யூனிவசிற்றிச் சூழலிலை இருக்கிற நாயள் எல்லாத்தையும் பிடிச்சுக் கருத்தடை செய்திட்டினம் எண்டு கேள்விப்பட்டம். இதைச் சொல்ல முதலி சொல்லுறான் "யூனிவசிற்றிக்குள்ளையும் கொஞ்சச் சேட்டை கூடின நாயள் இருக்கிதுகள். அவையளையும் பிடிச்சு கருத்தடை செய்ய வேணும் அண்ணை. அதுக்கும் உந்த வரவு செலவுத் திட்டக் காசைப் பாவிக்க விடுவினமோ எண்டு ஒருக்கா ரணிலைக் கேக்க வேணும்" எண்டு நக்கலடிக்கிறான்.

அவன் சொல்லுறதிலையும் ஞாயம் இருக்கிதுதான்.முந்தி சடைக்குட்டியோடை இருந்த கொஞ்சப்பேர் தடவி மாட்டினவை. அந்தாளைத் தொட்டு இப்ப இருக்கிற புத்தற்றை நட்சத்திரகாரன் என்ன செய்வ ரெண்டாலாம் புதுப் பிள்ளையள் பதிய வாறதெண்டவுடன் போய் மேயத் துவங்கி விடுவராம். ஆனால் இவை ஒருத்தரையும் பற்றி முறைப்பாடு செய்யாததாலை அவை தப்பி இருக்கினம் எண்டு கதைக்கினம். அப்ப நாயளின்ரை சாட்டிலை உவையளுக்கும் செய்தால் என்ன எண்டு கேக்கிறன்? பிள்ளையள் ஆசுவாசமாப் படிக்கலாம் எல்லே? இல்லாட்டி எப்பெப்ப கையைக் காலை நீட்டுவன் எண்டு அந்தரிக்க வேணும் எல்லே?

அது மட்டுமில்லை கடி நாய் கவனம் எண்டு ஒரு போட்டையும் யூனிவசிற்றி வாசலிலை தொங்கவிடவேணும் எண்டும் கதைக்கினம். ஏனெண்டால் அங்கை கடிநாயளும் நிக்குதாம். அதோடை பங்கஸ்,பக்ரீரியா, வைரஸ் எண்டு கிருமியளும் கூடிப்போச்சு தெண்டும் பேப்பர் கடையடியிலை கதைச்சினம். அந்தக் கிருமியள் அரை குறைப் படிப்போடை ஆற்றையேன் கையைக் காலைப் பிடிச்சு கொண்டு வந்து அதுக்கை உள்ளிட்டவையாம். அதாலை தெரியாதே எல்லாம் அரைகுறைதானே? அப்ப தங்களிலும் கூடப் படிச்சவை வந்திட்டால் தங்கடை பொட்டுக்கேடெல்லாம் வெளிச்சுப்போம் எண்டு சொல்லி புதுசா ஆரையும் படிப்பிக்க எண்டு எடுக்க வெளிக்கிட்டால் அவையளைப் பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் போய்ச் சொல்லி நிர்வாகத்தைக் குழப்பினமாம். அப்ப"நல்ல ஆக்கள் உள்ளுக்கை வராயினம். அரை வேக்காடுகள் தான் உள்ளுக்கை இருக்கப் போயினம். அப்ப படிச்சு முன்னேறித் தங்கடை சோலியளைப் பாப்பம் எண்டு நம்பிவாறவையின்ரை கெதி என்னாகும் எண்டு கேக்கிறன்? அங்கை இருக்கிற ஒருசில சோத்தியளின்ரை சுய நலத்துக்காக எங்கடை தமிழ் சனத்தின்ரை தரத்தை அடைவு வைக்கலாமோ? அப்ப எங்களை நாங்களே குறைக்கக் கூடியதான விளையாட்டெல்லே உது?

அரசியல்வாதியளிட்டைதான் உந்தச் சேட்டை இருக்கு. படிச்சவையும் உந்த ரூட்டிலையே போயினம் எண்டால்?? அப்ப உதை நாங்கள் கண்டும் காணாமல் இருக்கேலாது. சாப்பாட்டோடை, படிப்போடை சேட்டை விடுகிறவையளைச் சமூகத்திலை வைக்கப்பிடாது? அடிச்சுக் கலைக்க வேணும். ஆனால் கூட இருக்கிறவைக்கும் அந்தத் தைரியம் கிடையாது. அவையளைப் பிழை சொன்னால் அது பிறகு திரும்பித் தங்களையும் கடிச்சுப் போடும் எண்ட பயம். அதின்ரை



விளக்கம் அவையும் அரைகுறை எண்டது தானே?

அப்ப பொது சனம் நாங்கள்தான் இனி முடிவெடுக்க வேணும்,இப்பிடிப்பட்ட களிசறைச் சேட்டையளுக்கு என்ன செய்யப் போறம் எண்டு.

– வில்லங்கம் விநாசி

# முள்ளிவாய்க்கா
# பத்தாண்



சுபாசினி என்ற கர்ப்பினிப் பெண்ணை மறக்க முடியாது. அந்தப் பெண் துடிப்புள்ளவள் எதிர்காலத்தை நிதானமாக கணிக்கக் கூடியவள் அதனால் அடிக்கடி "நான் செத்துடுவன் .... நான் செத்துடுவன்" என பயந்து கொண்டிருந்தாள்.

அவள் கனரக ஆயுதப் பயிற்சிகளைப் பெற்ற ஒரு போராளியாக இருந்தாள். அவளின் சகோதரனான (இரட்டைக் குழந்தைகள்) லெப்டினன் தாவீதன் வீரச்சாவடைந்த நிலையில் அவள் இயக்கத்தில் இருந்து விலத்தி வீட்டுக்கு வந்திருந்தாள். போராட்ட வாழ்க்கையில் இருந்து வீட்டுக்கு வந்து சாதாரண வாழ்க்கையைத் தொடர்ந்தாலும் திடமானவளாகவே காணப்படுவாள்.

தாய் தந்தையின் ஏற்பாட்டில் திருமணம் செய்து மகிழினி என்ற பெண் குழந்தையைப் பெற்றெடுத்த அவள் வங்கி ஒன்றில் பணியாற்றி வந்தாள். அவளின் வாழ்க்கை மிகச்சிறப்பாகவே போய்க் கொண்டிருந்தது. இவ்வாறான வாழ்க்கைப் பயணத்தில் முள்ளிவாய்க்காலில் நாம் முடக்கப்பட்டிருந்த போது மீண்டும் கருவுற்று ஆறு மாத சிசுவை வயிற்றில் சுமந்திருந்தாள்.

அவள் இறுதி நேர சண்டைகளின் போது தனது திடத்தை இழந்திருந்தாள். தான் சாவடைந்து விடுவேன் என்ற பயம் அவளை ஆட்கொண்டிருந்தது. போராளியாக இருந்ததால் தாக்குதல்களுக்கு எவ்வாறு பாதுகாப்புத் தேட வேண்டும் என்று தெரிந்திருந்தாலும் அவளால் ஆறுமாத கருவைச் சுமக்கும் வயிற்றோடு பாதுகாப்பைத் தேடுவது சிக்கலாக இருந்தது.

அவளால் பதுங்கு குழிகளுக்குள் செல்ல முடியாது. உடனே நிலத்தில் படுக்க கூட முடியவில்லை. கர்ப்ப காலத்தில் அடிக்கடி வெளியேற்ற வேண்டி இருந்த சிறுநீர் கழிப்பதற்காகவும் அவளால் வெளியில் போக முடியவில்லை. ஐ வடிவ திறந்த பதுங்கு குழிக்குள் அவளால் நீண்ட நேரம் இருக்க முடியவில்லை. அவ்வாறு பல இடர்களைச் சுமந்து வாழ்ந்தாள் சுபாசினி.

தான் உயிர் தப்பவும் தன் பிள்ளையைக் காப்பாற்றவும் தனது வருங்காலத்தைப் பாதுகாக்கவும் முயன்றாள். அதற்காக அரச மருத்துவராகவும் பிராந்திய வைத்திய, சுகாதார அதிகாரியாகவும் இருந்து இறுதிவரை தன் பணியை செய்த மருத்துவக் கலாநிதி ஒருவரை சந்தித்து பலமுறை வேண்டுகிறாள். மீண்டும் மீண்டும் சந்தித்து நச்சரித்தாள்.

"டொக்டர் என்னை கப்பல்ல அனுப்புங்கோ பிளீஸ் என்னால இங்க இருக்க முடியவில்லை. நான் செத்திடுவன் டொக்டர்... என் பிள்ளையையும் என்னையும் மட்டுமாவது அனுப்புங்கோ" என தன்நிலையை கூறி பலமுறை வேண்டுகிறாள். ஆனால் அன்றைய காலத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்த பயங்கர காயங்களுடன் அதி தீவிர சிகிச்சைகளுக்காக உடனடியாக அனுப்ப வேண்டிய காயப்பட்ட மக்களின் தொகையும் தன்மையும் அந்த மருத்துவ அதிகாரியால் இவளுக்கான அனுமதியை கொடுக்க இடமளிக்க வில்லை.

"இல்லையம்மா நீங்க இப்பத்தான் ஆறு மாதம் எங்கள இப்ப நிறை மாத கர்ப்பினிகளைத் தான் கப்பல்ல அனுப்ப சொல்லி ICRC சொல்லுதம்மா அதோட இங்க ஆயிரக்கணக்காக சனம் காயத்தோட இருக்கு இதுக்க உங்களை அனுப்புறது கஸ்டம் அம்மா. நீங்கள் இன்னும் இரண்டு மாதம் கழித்து வாங்கோ நாங்கள் அனுப்புகிறோம்...."

இதே பதிலை பலமுறை அவளுக்கு சொல்லி திருப்பி அனுப்புகிறார் அந்த பிராந்திய மருத்துவ அதிகாரி. ஏனெனில் அப்போதய நிலையில் சிங்கள அரசு அனுப்பும் கப்பலில் வெறும் 400 பேரளவில் தான் திருகோணமலைக்கு அனுப்பக் கூடியதாக இருக்கும். அதுவும் தினமும் வரவேண்டிய கப்பல் இரண்டு நாளுக்கொரு முறை வந்தது.

கப்பல் வந்தாலும் மக்களை அதில் அனுப்ப சிங்களப் படைகள் தடையாக இருந்தன. கப்பல் வரும் போது கப்பல் தரித்து நின்ற இடத்தை நோக்கி சிங்களத்தின் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

தமிழீழ மருத்துவர்களும் அரச மருத்துவர்களும் இணைந்து பல ஆயிரம் மக்களின் உயிர்களைக் காத்திருந்தாலும் மருத்துவ வளங்கள் அற்று இருந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பப்பட வேண்டி நிலையிலையே பல ஆயிரம் மக்கள் இருந்தார்கள். இந்த நிலையில் சுபாசினியை கப்பலில் அனுப்புவதில் சிரமம் வந்ததால் அனுமதி மறுக்கப்பட்டது.

அவளின் குடும்பம் இருந்த மாத்தளன் பகுதியில் தினமும் சாவின் விழிம்பில் இருந்தாள். அன்றும் பயங்கர செல்லடி வலைஞர்மடத்தை வளைத்து பொக்கணைப் பக்கமாக இராணுவம் எம் நிலத்தை அபகரித்திருந்தது. அதனால் தலை நிமிர்த்த முடியாத எறிகணை வீச்சு நடந்து கொண்டிருந்தது. அவள் பதுங்கு குழிக்குள் குடும்பத்தோடு அமர்ந்திருந்தாள். நீண்ட நேரமாக அதற்குள் இருந்ததால் பல சிரமங்களை அவள் சுமந்தாள்.

பசி வயிற்றைக் குமட்டியது. சிறுநீர் கழிக்க வேண்டி இருந்தது. அவளால் சிறுநீரை அடக்க முடியவில்லை. ஒரு கர்ப்பினிப் பெண்ணால் சிறுநீரை அடக்குவது என்பது கடினமானது. அதனால் அவள் வரப்போகும் ஆபத்தை பொருட்படுத்தாது வெளியில் செல்ல முனைகிறாள். துணைவன் மறிக்க மறிக்க பதுங்கு குழியை விட்டு வெளியேறுகிறாள்.

கூடச் செல்ல முனைந்த கணவனிடம் "மகளை கவனமாக பாருங்கோ உடனே வாறன்"

என்று சொல்லி போகிறாள் அதனால் அவள் வெளியேறிதைப் பார்த்த அவளின் தாய் அவளுடன் கூட செல்கிறாள். தாயும் தமக்கையும் தனியே போவதைப் பார்த்த கடைசித் தம்பியும் அவர்களுடன் கூட செல்கிறான் .

அப்போது அடிக்கப்பட்ட ஆட்லரி எறிகணை அவர்களருகில் வீழ்ந்து வெடிக்கிறது. சுபாசினி படுகாயமடைகிறாள். தாய்க்கு ஒரு கை எலும்பின் ஒரு பகுதி காணாமல் போகிறது. சிறு தசைத் துண்டிலும் தோலிலும் அவரின் கை தொங்கிய படி கிடக்கிறது. அதுவும் அந்த தோல் இரண்டு மூன்று முறை முறுகுப் பண்ணுக் கிடந்தது. தம்பி தலையில் படுகாயமடைந்து அவனும் கீழே விழுகிறான். இது நடந்த அந்த நொடியில் தொடர்ந்து எறிகணைகள் அருகில் வெடிக்கின்றன. வீழ்ந்தவர்களை யாரும் தூக்க முடியவில்லை. தூக்க முடியாத அளவுக்குப் பலமான தாக்குதல் நடக்கிறது.

வெளியில் சென்றவர்கள் இத்தாக்குதலுக்கு கூட திரும்பி வராதது கண்டு சுபாவினுடைய கணவன் தனது உயிரையும் பொருட் படுத்தாது வெளியில் வந்து பார்க்கிறார். அங்கே இரத்தச் சகதியில் மூவரும் கிடந்தனர். உடனடியாக அவர்களை தூக்குகிறார். அதற்குள் மற்ற உறவுகளும் வர அந்த இடத்தில் இருந்து வெளியேற வேண்டிய நிலை. அதனால் அவர்கள் கடற்கரையால் வெளியேறிச் செல்கின்றனர். ஏனெனில் பொக்கணைப் பக்கத்தில் இருந்து ஊடறுத்த இராணுவம் கடற்கரையைத் தவிர்ந்த பிரதேசத்தைக் கைப்பற்றி இருந்தது. அதனால் கடற்கரை வழியாக வலைஞர்மடத்துக்கு வருகிறார்கள்.

அங்கே இருந்த மருத்துவமனையில் அவர்களை மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு சுபாசினி இறந்து விட்டதை உறுதிப்படுத்துகிறார்கள். ஏனைய இருவரையும் சத்திரசிகிச்சைக்காக உள்ளே எடுக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் இருவரையும் தொடர்ந்து பராமரிக்க முடியவில்லை இருவருக்கும் உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டி இருந்தது. இரத்தத்தை யாரிமும் எடுக்கக் கூடிய நிலை இல்லை. அவ்வாறு இரத்தம் குடுப்பதற்கு யாராவது தயாராக இருந்தாலும் எடுப்பதற்கு குருதிப்பை இல்லை (Blood bag) அதனால் அவசர நோயாளர்களுடன் திருகோணமலைக்கு ICRC கப்பலினூடாக அனுப்புகிறார்கள்.

அதே நேரம் கப்பலுக்கு ஏறுவதற்காக படகில் சுபாசினியின் தாயைம் தம்பியும் தங்கையும் செல்கிறார்கள். தன் மகளை இழந்து விட்ட சோகம் ஒருபுறம் காயத்தின் வலி மறுபுறம் என தாய் ஏறுகிறார். அப்போது தண்ணீர் தருமாறு வேண்டி அழுகிறார். நான் தண்ணீர் எடுக்கச் செல்கிறேன். ஆனாலும் அதற்குள் படகு கப்பலை நோக்கிச் செல்லத் தொடங்குகிறது. தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருந்த சுபாசினியின் தாய் இறுதி வரை தண்ணீர் அருந்தாமலே படகிற்குள் உயிர்விட்ட செய்தி எனக்கு பின்னால் தான் தெரிந்தது.

அதுவும் படகிற்குள் இருந்து வெளியில் கையை நீட்டி கடல் தண்ணீரைக் கையில் அள்ளி தாய்க்குப் பருக்க முயன்ற மகளின் கண்முன்னே தாய் தண்ணீர் பருகாமல் உயிர் விட்டிருந்தர்.

அதே நேரம் குடும்பத்தில் இருவரை இழந்து இருந்த

# ால் மனிதப்பேரவலத்தின்
# டு நினைவுகள்




"ஏப்ரல் 17 ஆம் திகதி எனது பிறந்தநாளன்று வடக்கு நோக்கி பயணமானேன். எனது பிறந்தநாள் கடந்து ஒருமாதமும் ஒரு நாளும் தாண்டிய மே 18 அன்று நமது தமிழ்பேசும் வாழ்வில் நடந்தேறிய மிகப்பெரிய முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலம் எனது நினைவுக்கு வந்ததே பிறந்தநாளன்று நான் வடக்குக்கு போனதற்கு காரணமாகும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அப்பாவி மக்களைக் கொல்லும் சிங்கங்கள் வாழும் காலத்தில் நான் ஏன் பிறந்தேன் என்று நினைக்கையில் மனது கனத்து மூளை உருகி பேரவல நினைவுகள் ஒரு சக்தியாக வடிவெடுத்தது.

இச்சக்தி என் கண்களுக்குள் இறங்கி பெரு வெளியில் ,ஓடிய வேளை, மூன்று தசாப்தங்களுக்கும் மேலான காலமாக என்னோடு தோழமை கொண்டிருந்த - ஐரோப்பாவில் தான் அனுபவித்திருந்த "சகலவித" சுகவாழ்வையும் துறந்து தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் வேதனைகளில் சகவாழ்வாகத் தன்னை கரைக்கப் புறப்பட்டு வந்த ஒருவரைக் காண விரும்பியே வடக்கு நோக்கி ஓடினேன்.

வேசம் களைந்தும், கலைந்தும் வாழ்ந்த அந்த மனிதனை எனது பிறந்தநாளில் கண்டேன்.இவர் முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்து முடிந்த மறுநாள் மே 19 அன்று காலை நேரத்தில், உயிர் துறந்த தமிழ் உடலங்கள் குவிந்து கிடந்த பகுதிக்கு தைரியமாக வெளியிலிருந்து உள் நுழைந்த முதல் மனிதனாகும். இவர் உள்ளே நுழைந்த மறுகணம்- இறந்த தமிழ் உடலம் ஒன்றின் வலது கை, தசைகளின்றி வெறும் எலும்புகளுடன் உயர நிமிர்ந்தபடி ஒரு தேனீர் குவளையை ஏந்தியிருந்ததைக் கண்டார்.

2009 வரை கடவுளர் எவரையும் கையெடுத்துக் கும்பிடாத இந்தத் தோழர் அந்தக் குவளையை எடுத்து வந்து தனது வீட்டில் வைத்து விளக்கேற்றி வணங்கி வருகின்றார். மனது ஒரு நிலைப்படும் தேவையை உணரும் வேளைகளில் குவளையின் முன்னே வந்து நின்று கை கட்டி வாய் பொத்தி நிற்பதை தோழர் வழக்கமாக கொண்டிருப்பதாக அவர் என்னிடம் கூறிய போது நான்- நான் எனும் என்னை இழந்து அந்தக் குவளையாக மாறியிருந்தேன்."

**: தோழர் பஷீர் சேகுதாவூத்**



சுபாசினியின் கணவனும் மகளும் அவளின் உடலைக் கூட அடக்கம் செய்யாது சோர்ந்து போய் கிடந்தனர். மருத்திவமனையின் ஓரத்தில் தம்மை மறந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது திடீர் என்று தூக்கத்தில் இருந்து எழுந்த மகிளினி பசியில் அழுது துடித்துக் கொண்டிருந்தாள்.

மகிழினியைத் தூக்கிக் பசியாற்ற யாரும் இல்லை. அவளுக்கு ஒரு கப் டீ குடுக்க யாரும் இல்லை அங்கே இருந்தவர்கள் அனைவரும் காயங்களின் மோசத்தால் சோர்ந்து போய்க் கிடந்தனர். அப்போது அங்கே காயமடைந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா. வே பாலகுமாரன் அவர்கள் மகிளினியைத் தூக்கிக் கொள்கிறார். அவருக்கு ஒற்றைக்கை மட்டுமே இயங்கு நிலையில் இருந்தது. மற்றக்கை காயத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாது மகிளினியை ஆற்றுகைப்படுத்துகிறார்.

அன்பாக அவளை ஆதரித்து அருகில் யாரிடமோ சுடுநீர் வாங்கி ஒற்றைக் கையால் தேநீர் தயாரித்து அவ ளின் பசி போக்குகிறார். உண்மையில் அந்தக் காட்சி வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதவை.

ஒரு தடவை அந்த தேநீரை சுவைத்த மகிளினி முகத்தில் பிரகாசம். தாயை இழந்து பேத்தியாரை இழந்து உதவியென இருந்த தந்தை கூட நடைப்பிணமாக இருந்த போது அவளுக்கு ஒரு துணை கிடைத்ததை அவள் மகிழ்வாக ஏற்றுக் கொண்ட தருணத்தில் இன்று முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் அவர்களையும் எங்கே எனத் தெரியாத நிலையை சிங்கள தேசம் எமக்கு உருவாக்கி விட்டதன் கொடுமை நெஞ்சைப் பற்றிக் கொள்கிறது.

**: இரத்தினம் கவிமகன்**

"வன்னிமைப்பெண்கள் ஆறுபேர் வன்னிநாட்டில் ஆட்சியமைத்து செங்கோலோஞ்சி வந்தனர். பறங்கிகள் வன்னியை கைப்பற்றும் போரில், தீவிரமாக எதிர்த்தும் அப்போரில் பறங்கிகள் சூழ்ச்சியால் வென்றனர்.

வன்னிநாச்சிகள் அறுவரும் - பணிப்பெண் ஒருத்தியாக எழுவர் ஆண்வேடமிட்டு நேரில் போர்க்களம் பூண்டனர். இறுதியில் எதிரி கையில் மாளாமல் தவிர்த்து, களப்போரத்தில் தீ மூட்டி வீழ்ந்து வீரசொர்க்கம் எய்தினார்.

இந்த எழுவரும் வன்னியின் தெய்வங்களாக மதித்து போற்றப்பட்டனர். வன்னிமை நங்கைகளின் நினைவாக இன்றும் எஞ்சியிருக்கும் - "வட்ட வாகல்" எனுமிடத்தில் நாச்சிமார் கோயிலொன்று எழுந்தது. இது சப்தகன்னியர் கோயிலென்றும் அழைக்கப்படும். முல்லைத்தீவிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில், கிழக்கே நந்திக்கடலும் - வடக்கே வாவியும் - தெற்கும் மேற்கும் சாலைகளும் எல்லைகளாக கொண்டு இக்கோயில் அமைக்கப்பட்டு வழிபாடும் எழுந்தது.

இவ்வாலயத்தின் வடபகுதியில் அமைந்த பிரதேசம் இன்று முள்ளிவாய்க்கால் என்று அழைக்கப்படும் "செல்விவாய்க்கால்" என்ற பெயருடைய பற்றாகும்.

நாச்சிமார் குடியேற்றமும் - வாழ்க்கையும் வீரமும் - கற்பும் - போரும் - வீரமரணமும் கொண்ட பகுதிகளாக செல்விவாய்க்கால் மருவி சொல் வழக்கில் முள்ளிவாய்க்கால் ஆனது.

செல்விவாய்க்காலின் நாச்சியார் தோன்றல்கள் வீரத்தின் வழிபடு அடையாளமாக கன்னியர் கோயிலை வட்ட வாகல் கரையில் அமைத்து தொழுதனர்.

வீரமும் - கற்பு நெறியும் வழுவாது வாழ்ந்து வீழ்ந்த மங்கையரிற்கு தெய்வநிலை கொடுத்து போற்றித்தொழும் பண்பு முல்லைமக்களின் பண்டைய வழக்கிலொன்று."

நாச்சியார் விளையாடலை பாடும் தோத்திரம் இங்ஙனம் கூறும்..

"கதியுதவு தெருவடியிற் கன்னியர்கள் தங்கிக்
களங்குடனே பாண்டியுமம் மானாருமாடி
அரியினரு வெள்ளிலையு மன்புடனருந்தி
ஆயாசம் தீர்ந்து மவரன்புடனேழுந்து
நதிபரவு நந்திவெளி நாடி நம்மேழு
நறு நுதலிமார்களுமிடை துவள வந்து
விடலரிய வேலை வளை வாவியருகாக..."

: வன்னி வளநாட்டில் நாச்சியார் வழிபாடு

**: பேராசிரியர் வை.கனகரத்தினம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்**

பிறகொரு 400 ஆண்டுகள் போனபின் - அதே நந்திக்கரையில் அடக்குமுறை சிங்கள படைகளின் கையில்அகப்பட்ட பெண்ணொருத்தி உடல்துவண்டு பசியொற்றிக் கண்களோடு குனிந்து அமர்ந்திருந்தாள்.

முப்பதாண்டுகால வீரஞ்செறிந்த தமிழரின் போரியல் தலைவனின் மகளா நீயென சந்தேகமுற்ற சிங்களப்படைகள் - ஆடைகளைந்து அவளை மானபங்கம் செய்து குற்றுயிரோடு வன்புணர்ந்து சிதைத்தெறிந்து எக்களிக்கின்றனர்.

போர் மேகம் சூழ்ந்திருந்த தேசத்தில் - செய்தி சொல்லும் தேசத்தின் அடையாளகுரலாய் - வெற்றிக் கலையின் இசையொலியாய் இனிதே இயங்கிய அவள் பெயர் - இசைப்பிரியா என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

அபலையாகி அழுகுரல் உரத்து ஆவியடங்கிப் போன அந்தக்கரையின் அலைகள் நாச்சியார் வீரத்தோடு சேர்த்து அவளது மறத்தையும் ஓங்கி இன்றும் இசைக்கின்றன.

எதிரொலி
Ethiroli
24-30 ஏப்ரல் 2019

# நாய்களுக்கு வாய்த்த வாழ்வு


● மோகன் வைத்திலிங்கம்

இருள் நன்றாகக் கவிந்திருந்தது. ஆள வரம் குறையத் தொடங்கிய அந்த குச் சொழுங்கையில், ஒரு மோட்டார் சைக் கிள் போவதும் வருவதுமாக நோட்டமிட் டுக் கொண்டிருந்தது. அதை ஓடிக் கொண்டிருந்தவரின் கண்கள் சுற்றிலும் அலசிக் கொண்டிருந்தது. எவரும் வர வில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, அவசரமாக தான் கொண்டு வந்த உரப் பையை அப்படியே சந்திக்கு அருகாக போட் டார். அடுத்த கணமே அந்த மோட்டார் சைக்கிள் மின்னலாக மறைந்து விட்டது.


அப்படி அவர் களவாகக் கொண்டு வந்து போட்டது என்னவாக இருக்கும்?

கஞ்சா, போதை வஸ்து, கள்ளநோட்டு இப்படி எதுவுமில்லை. அவர் வீசிவிட்டுப் போன பையில் இருந்து ஈனக்குரலில் முன கியபடி வெளியே வந்தன சில நாய்க்குட்டி கள். பிறப்பால் பெண் என்பதால் அந்த நாய்க்குட்டிகளுக்கு அப்படி ஒரு கதி. சந் தைகள், வீதியோரங்கள், கோயில்கள் போன்ற பொது இடங்களில் இப்படி இரவோடிர வாகக் கொண்டு வந்து விடப்படும் பெண் நாய்க்குட்டிகள் ஏனைய விலங்குகளால் தாக்கப்பட்டோ, வாகனங்களில் நசிபட்டோ உயிரிழக்கும் சந்தர்ப்பங்களே அதிகம். அப்படியும் அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் பிழைத்து வீதியோரங்களிலும், சந்தை களிலும் கிடைக்கும் கழிவுணவை உண்டு உயிர் வாழும் நாய்கள், காலப்போக்கில் கட்டாக்காலி தெரு நாய்களாகி, தம்மை வஞ்சித்த ம்னிதர்களை கலைத்து கலைத் துக் கடித்து பழி தீர்க்கின்றன.

ஆண் நாய்க்குட்டி என்றால் அதனைக் கொண்டு போய் வளர்ப்பதற்குப் பலர் போட்டி போடுவார்கள். ஆனால் அதுவே பெண்குட்டிகள் என்றால் அவ்வளவுதான். அவை கண் திறப்பதற்கு முன்னரே வீதிக ளில் போட்டு விடுவார்கள். பெண் நாய்க் குட்டிகளை வளர்த்தால், அதுவும் குட்டி







போட்டால் தொல்லை, அதனோடு உறவு கொள்ள வரும் ஆண் நாய்க்கூட்டத்தால் பெரும் தொல்லை என்பவற்றாலேயே பெண்நாய்க்குட்டியை வளர்க்கப் பலரும் பின்னடிக்கிறார்கள். ஆனால் இத்தனைக் கும் ஆண் நாய்களை விடவும் பெண் நாய் களே நன்றியுணர்விலும், காவல் காப்பதி லும் வல்லனவாக உள்ளன.

அண்மைக் காலமாகத் தெருநாய்களின் தொல்லை அதிகரித்து வருவதைக் கண் கூடாகக் காண்கிறோம். காலையில் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டால் தெருக் களில் குவியல் குவியலாக நாய்களின் கழி வைக் காணலாம். அதற்கப்பால் எங்கேயா வது ஆகக் குறைந்தது ஒரு நாயின் செத்த உடலாவது இருக்கும். அநாதரவாக விடப் பட்டிருக்கும் பல பெண் நாய்க் குட்டிகள் தெருவில் அங்கும் இங்கும் முனகியபடி அல்லாடிக் கொண்டு திரியும். அண்மை யில் தேநீர் கடை ஒன்றில் வந்து குவியும் நாய்களை விரட்டுவதற்கு கடைத் தொழி லாளி சுடுநீரை நாய்களுக்கு மேல் கொட்டி விரட்டுவதைக் கண்டோம். அந்தச் சுடு நீரால் பாதிக்கப்பட்ட பல குட்டிகள் அந் தக் கொதி நீரின் சூடு தாங்காது கத்திக் குளறிக் கொண்டு ஓடுவதைப் பார்த்த போது எமது சமூகத்தில் அருகிக் கொண்டு வரும் மனித நேயத்தைப் பற்றிய சிந்த னையே மேலெழுந்தது. "பெண் நாய்க ளைக் கொண்டு சென்று தெருவில் எறிந்து விடுகின்ற எம்மவரின் வழக்கம் ஒரு நாள் எமது சமூகத்தைப் பாதிக்கும்" என்று யோகர் சுவாமிகள் தெளிவுறச் சொல்லி இருக்கிறார்.

நாய்கள் மேல் அதிகம் அன்பு கொண் டவர் யாழ்ப்பாணத்துச் சித்தர் எனச் செல்ல மாக எல்லோராலும் அழைக்கப்பட்ட தவத்திரு யோகர் சுவாமிகள். அவரது ஐம்பதாவது நினைவு தினத்தை ஒட்டி இந்துமாமன்றம் இந்து ஒளி இதழை யோகர் சுவாமிகள் சிறப்பு மலராக வெளி யிட்டபோது அதன் ஆசிரியராக இருந்து செயற்பட்டவர் சிவபூமி அறக்கட்டளை யின் அதிபர் ஆறுதிருமுருகன். அவர் அந்த இதழைத் தயாரிப்பதற்காக யோகர் சுவாமி பற்றிய தகவல்களைத் திரட்டிய போது பல தகவல்களில் அவர் யாழ்ப்பா ணத்தில் காணப்படும் தெரு நாய்கள் பற் றிக் குறிப்பிட்ட ஜீவகாருண்யக் குறிப்பு கள் காணப்பட்டதாகவும், அவைகளே தனக்கு நாய்கள் சரணாலயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டியதாகவும் செஞ்சொற் செல்வர் கூறியிருக்கிறார்.

ஒரு நாள் யாழ்ப்பாணத்திலுள்ள தேநீர் கடை ஒன்றின் வாசலில் வந்து நாயொன்று நின்று கொண்டு பசியால் அந்தரித்துக் கொண்டிருந்ததாம். கடைக்காரரும் அந்த நாயைப் பொருட்படுத்தாது வடையைச் சுட்டுச் சுட்டு வாடிக்கையாளர்களுக்குப் போட்டுக் கொண்டிருந்தாராம். பசியெ டுத்து வந்திருக்கின்ற நாய்க்கென ஒரு வடையைக் கூடப் போட வேண்டும் என்ற உணர்வு அவருக்கில்லாத போது அங்கு வந்த யோகர் சுவாமிகள் "எட அந்த நாய் பாவமடா. ஒரு வடையைத் தன்னும் போடடா. அது போகேக்கை உன்னை வாழ்த்திட்டுப் போகும்" என்று சொன்னா ராம். கடைக்காரன் அதைச் செவிமடுக்க வில்லை. சுவாமிகளே தனது மடியிலி ருந்து இரண்டு சதத்தைக் கொடுத்து வடை ஒன்றை வாங்கி நாய்க்குப் போட் டாராம். நாயும் வடையின் பாதியைத் தின்றுவிட்டு மிகுதியை வாயால் கௌவிக் கொண்டு தெருவுக்குப் போனபோது அங்கு வந்த லொறி ஒன்றின் சில்லுக்குள் அகப்பட்டு இறந்து போனது. அதைப் பார்த்த யோகர் சுவாமி "போற நேரம் அது வந்து உன்னை வாழ்த்திப்போட்டுப் போக ஒரு வடை கேட்டது. நீ குடுக் கேல்லை. பிறகேன் சத்திரத்துக்குப் போய் வைரவர் கோயிலிலை பூசை புனஸ்காரம் எல்லாம் செய்யிறியள். வைரவரே உங்கடை வாசலைத் தேடி வந்தால் விரட்டிறியள்" என்று திட்டிப்போட்டுப் போய்விட் டாராம் - என்று ஒரு குறிப்பும் காணப் படுகிறது.

நாய்களினால் ஏற்படுகின்ற சமூக அவ லங்கள் பற்றிய சிந்தனைகளை ஒரு முகப் படுத்தி அவற்றுக்கு, இது போன்ற சரணா லயமே ஒரு தீர்வாக அமையலாம் என்று கருதி அதற்குச் சிவபூமி அறக்கட்டளை செயல் வடிவம் ஒன்றினை முன்னுதார ணமாக நடைமுறைப்படுத்தியுள்ளது. பல லட்சக் கணக்கான பொருட் செலவில் பளைப் பகுதியில் இயக்கச்சி என்ற இடத் தில் நாய்கள் சரணாலயம் ஒன்றினை அமைத்துச் சிவபூமி அறக்கட்டளையின் மூலம் சமூகத்துக்கு ஒரு தீர்வினைத் தந்திருக்கிறார் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன். சரணாலயத்துக்குரிய நிலத்தை நன்கொடையாக செல்வி. ரோகினி பேராய வர் என்பவர் வழங்கியிருக்கிறார். அவர் முன்னாள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் மறைந்த பேராயவர் அவர்களின் மகளாவர்.

"சொற்கள் செயல் வடிவம் பெறுவ தென்பது அவ்வளவு சுலபமாக நடைபெ றக் கூடிய காரியமல்ல. அதுவும் சமூகத் தில் இது ஒரு புதிய முயற்சியாகக் காணப் படுகிறது. கட்டாக் கலியாகத் திரியும் நாய்களை யார் பிடிப்பது? அவற்றை எப் படி சரணாலயத்துக்குக் கொண்டு சேர்ப் பது? நாய்கள் தமக்குள்ளே கடிபட்டுக் குத்துப்பட்டுச் சீவிக்கின்ற இயல்புடை யவை. ஆடு மாடுகளைப் போலக் கூட்டம் கூட்டமாக வாழக் கூடியதல்ல நாய். நாய் களுக்கு வரும் நோய்கள் பல. அவைக்கும் தொற்றி, மனித குலத்தையும் கேள்விக் குறியாக்கக் கூடிய விடயமாக நோய்கள் நாயிடத்தில் உண்டு. எனவே தனித்தனி யாக நாய்களுக்குரிய பதிவுகள், கோவை கள் என்பனவற்றைப் பேண வேண்டும். அவை பற்றிய பதிவுகளை ஒழுங்கு படுத்த வேண்டும் என்று பல நடைமுறைச் சிக்கல்கள் உண்டு" என்பதையும் ஒப்புக் கொள்ளுகிறார் ஆறு.திருமுருகன்.

"இதை நாம் ஒரு சமூகப் பணி என்று பார்க்க வேண்டும். சமூகத்துக்குத் தேவை யான ஒரு மேம்பாட்டுத் திட்டங்களில் இதுவும் ஒன்று என்ற உணர்வு எம் எல்லோரிடமும் வரவேண்டும். மனிதன் மட்டுமல்ல அவனைச் சுற்றிய எல்லா விடயங்களும் ஆரோக்கியமாக இருப்ப தையே ஒரு ஆரோக்கிய சமூகம் என்கின் றனர் சமூகவியலாளர். எனவே வெறுமனே நாய்கள் பற்றி ஏன் இத்தனை சிந்தனை? இத்தனை செலவுகள்? என்றில்லாது அதற் குப் பின்னால் இருக்கக் கூடிய சமூகப் பொறுப்பையும் ஆரோக்கியமான சிந்தனை யையும் பற்றிய விழிப்புணர்வை மக்கள் பெறவேண்டும் அல்லது அவர்களுக்கு ஏற் படுத்த வேண்டும். அந்தவகையிலேயே இச் சரணாலயத்தின் வெற்றி தங்கியிருக்கி றது " - என்கிறார் செஞ்சொற்செல்வர்.

"சமூகத்தின் அங்கமாக இருக்கின்ற அரச திணைக்களங்கள், அரச அமைப்பு கள், உள்ளூராட்சி அமைப்புகள் போன்ற அனைத்துச் சமூகம் சார்ந்த அமைப்புகள் இதனுள் பொறுப்பு வாய்ந்த பங்காளிக ளாக வரவேண்டும் என்பதையே சிவபூமி அறக்கட்டளை எதிர்பார்க்கிறது. அவர் கள் தம்மை அதிகாரிகளாக எண்ணாமல் அதிகாரத் தோரணையோடு வராமல், அவர்களும் தாமாக வந்து பொறுப்பு களைக் கையேற்றுச் செயற்பட்டாலே ஒழிய இது போன்ற பணிகளை முன்னெ டுப்பதில் பல சிரமங்கள் உண்டு. அரச நிர்வாக அலகுகளினால் "எமக்குச் சிரமங் கள் ஏற்படுமாயின் இந்த நாய்களின் சரணா லயத்தை ஒன்றில் சுகாதாரத் திணைக்களத் திடமோ அல்லது அது அமைந்திருக்கும் பகுதிக்கான உள்ளூராட்சிச் சபையிடமோ அதனைக் கையளித்துவிட்டு நாம் அப் பணியிலிருந்து ஒதுங்கிவிடுவோம்" என்று தெளிவுபடக் கூறியிருக்கிறார் ஆறுதிரு முருகன்.

நல்லதை நாமும் செய்யமாட்டோம், நல்லது செய்பவர்களையும் செய்ய விட மாட்டோம் என்னும் வைக்கோல் போர் நாயைப் போன்ற குணம் அரச நிர்வா கத்தின் அடிமனோநிலையாக இருக்கின் றது. உண்மையில் இப்படியான நல்லகாரி யங்களை, சமூக மேம்பாட்டு நடவடிக்கை களை அரசே செய்திருக்க வேண்டும். ஆனால் அப்படி அரசு செய்யாது. அதே வேளை நாய்கள் சரணாலயம் போன்ற நல்ல முயற்சிகளுக்கும்," சுகாதாரச் சீர் கேடு" , "தொற்று நோய் ஆபத்து", "அரச அனுமதி வேண்டும்" போன்ற சட்டங் களை தூக்கிப் பிடித்துக் கொண்டு அரச நிர்வாகம் வரவும் கூடும். அதனையும் இந்த நாய்கள் சரணாலயச் சிந்தனையா ளர்கள் அனுமானித்தே இருக்கிறார்கள் என்பதையே ஆறு.திருமுருகனின் கூற்று சுட்டுகிறது.

எப்படியோ, இந்த நாய்கள் சரணால யத்தின் மூலம் இங்கு வீதிகளில் உயிர் வாழும் எத்தனிப்போடு அந்தரிக்கும் பெண் நாய்க்குட்டிகளுக்கு விடிவு பிறந்தால் சரி. ■

# தீயில் கருகிய கருவூலம்

● என். சரவணன்

பாரிஸ் நோட்ரே டேம் கதீட்ரல் தேவாலயத்தின் முக்கிய பகுதிகள் எரிந்து நாசமாகியுள்ளன. கிட்டத்தட்ட 9 நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. பாரிசின் அடையாளங்களில் ஒன்றாக கருதப்பட்டு வந்தது. இதனைப் பாதுகாக்கவேண்டும் என்றும் மீள புனரமைக்க வேண்டும் என்கிற கோரிக்கை இன்று நேற்றல்ல இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அழுத்தமாக எழுந்தது. இரண்டு உலக யுத்தங்களிலும் இருந்து இந்த தேவாலயம் தப்பியிருக்கிறது.

ஆனால் அதற்கு முன்னமே உள்நாட்டு போராட்டங்களால் பாதிப்பட்டிருக்கிறது. ஜெர்மனின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்கிற அச்சத்தில் மூலஸ்தானத்தில் இருந்த நுணுக்கமான வேலைப்பாடுகளைக் கொண்ட பழம்பெரும் கண்ணாடிகள் முன்னெச்சரிக்கையாக அங்கிருந்து அகற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு யுத்தம் முடிவடைந்ததும் மீண்டும் அவை இருந்த இடங்களில் பொருத்தப்பட்டன.

பிரான்சின் வரலாற்று நிகழ்வுகளோடு நெருங்கிய நேரடி தொடர்புடைய தேவாலயமாக இருந்து வந்த இந்த தேவாலயம் 1790 பிரெஞ்சு புரட்சி காலத்தில் புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. அரசுக்கும் தேவாலயத்துக்கும் இருந்த தொடர்புகளின் காரணமாக தேவாலயம் இலக்கு வைக்கப்பட்டது ஆச்சரியமில்லை. அங்கிருந்த 20க்கும் மேற்பட்டு முக்கிய பழமையான பெரிய சிலைகள் சிதைக்கப்பட்டன. 1977இல் அச்சிலைகளில் 21 தலைகள் மாத்திரம் கண்டெடுக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 1792 செப்டம்பரில் நிகழ்ந்த படுகொலைகளின் போது பல பாதிரியார்கள் கொல்லப்பட்டும், சிறைகளில் அடைக்கப்பட்டுமிருந்தார்கள்.

பிரான்சில் புகழ்பெற்ற எழுத்தாளரான விக்டர் ஹூகோ 1831ம் ஆண்டு நோட்ரே டேம் கதீட்ரல் தேவாலயத்தைப் பற்றி விரிவாக பல விபரங்களுடன் The hunchback of Notre Dame (பிரெஞ்சு மொழியில்: Notre-Dame de Paris> "Our Lady of Paris") நாவல் வடிவில் ஒரு நூலை வெளியிட்டார். மிகவும் முக்கியமான வரலாற்றுச் சின்னமான அந்த தேவாலயத்தின் அன்றைய அவல நிலையைப் பற்றியும் அது பாதுகாக்கப்பட வேண்டிய முக்கியத்துவமும் அந்த நூலில் பொதிந்திருந்தது.


ஹூகோ இந்த நூலுக்கு முன்னரே பாரிசில் உள்ள புராதன சின்னங்களைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை "Guerre aux Démolisseurs" (War to the Demolishers) எழுதியிருந்தார். அதன் விரிவாக்கமாகத் தான் ஒரு பதிப்பாளருக்கு இந்த நூலை எழுதி முடிக்க ஒத்துக்கொண்டார்., அதன்படி 6 மாதங்களில் அவர் அதனை முடித்துக்கொடுத்தார். மிகவும் பிரபல்யமான நூலாக அது கருதப்படுகிறது.


இந்த நூல் பாரிசின் தொல்பொருள், அதன் முதுசம் பற்றிய அக்கறையை பலருக்கும் ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக இந்த தேவாலயத்தின் கட்டடக் கலை குறித்து நிறைய விபரங்களைப் பதிவு செய்தார். அதனைத் தொடர்ந்து அந்த தேவாலயம் 1844இல் மீண்டும் புனரமைக்கப்பட்டது.

### ஹூகோவின் The hunchback of Notre Dame நாவல்

- 1923இல் திரைப்படமாக ஆக்கப்பட்டது.
- 1996இல் உலகப் பிரசித்தி பெற்ற வோல்ட் டிஸ்னி நிறுவனம் சிறுவர்களுக்கான கார்ட்டூன் திரைப்படமாக தயாரித்திருந்தது.
- 1997இல் மீண்டும் இன்னொரு வடிவத்தில் திரைப்படமாக வெளிவந்தது.
- பாரிசில் நாடக வடிவத்திலும் மேடையேற்றப்பட்டிருக்கிறது.
- தமிழில் கூட இது மொழி பெயர்க்கப்பட்டு 'நாத்தார் தாம் கூனன்' என்கிற பெயரில் வெளியாகியிருக்கிறது.

கடந்த வாரம் 14ஆம் திகதி அதன் திருத்த வேலைகளின் போது 16 புனிதர்களின் வெண்கலச் சிலைகள் வெளியில் இருந்து உள்ளே வைக்கும் நிகழ்வைக் காண ஆயிரக்கணக்கானோர் வந்திருந்தனர். 100 மீற்றர் உயரத்துக்கு உயர்த்தி உள்ளே கொண்டு சென்று வைக்கப்பட்டது. ஆனால் இந்த தேவாலயத்தை நுணுக்கமாக சீர்திருத்தும் புனருத்தான பணிகளின் போது ஏற்பட்ட தீயே இப்போது இருந்ததையும் அழித்து விட்டிருப்பதுதான் அவலம்.



















VACANCIES
VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
Vavuniya Campus of the University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.
• Faculty of Business Studies
Department of Economics and Management
Post: Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in
• Faculty of Ap
Department of F
Post: Senior Le
(Probationary) i
Note:
Preference will
Technology/ C
• Technology S
Post: Senior I
(Probationary
Note:
Preference w
Technology/
It is strongly
8/2016(i) & 07
www.ugc.a
• Informati
Post: Tem
Note:
Preference
Science/C
Technolog
It is stron
University
METHOD OF RECRUITMENT: Selection by interview

கொழும்பு பல்கலைக்கழகம்
கேள்விகளுக்கான அழைப்பு (IFB)
பொருட்கொள்வனவு அறிவித்தல்
கட்டிட நிர்மாணம், புதுப்பித்தல், புனரமைப்பு வேலைத்திட்டங்கள்
கொழும்பு பல்கலைக்கழகம்
(1) MD/MR/C/40/2017 ரூபா 210, 000/-
(2) MD/MR/C/04/2019 ரூபா 90,000/-
(3) MD/MR/B/05/2019 ரூபா 28,000/-
(4) MD/MR/B/03/2016 ரூபா 16,000/-

# தமிழை வெறுக்கும் யாழ்.பல்கலை

● வேதநாயகம் தபேந்திரன்

தமிழுக்காகவும் தமிழ் பேசும் மக்களுக்காகவும் போராடக் களம் கொடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழை முழுமையாகவே கைவிட்டு விட்டது.

கொழும்பு பல்கலைக்கழகம் அதன் வெற்றிடங்கள், கேள்வி கோரல்கள், புதிய கல்வியாண்டுக்கான அறிவிப்புகள் என்பவற்றைப் பத்திரிகைகளில் தமிழிலும் விளம்பரம் செய்யும் போது, யாழ் .பல்கலைக்கழகமோ சகல தமிழ் பத்திரிகைகளிலும் ஆங்கிலத்தில் மட்டுமே விளம்பரம் செய்கின்றது.

கொழும்பில் அமைச்சின் கூட்டங்களுக்குப் போகும் நாம் தமிழ் மொழி பெயர்ப்புத் தருமாறு கேட்போம். தருகிறார்கள்.

இது போன்ற பல விளம்பரங்களை அவர்கள் சேகரித்து எமக்கு காட்டி நீங்களே உங்களது தாய் மொழியை மதிக்காத போது எம்மிடம் மொழியுரிமை பற்றி ஏன் கேட்கிறீர்கள் எனக் கேட்டால் என்ன சொல்வது?

1974 ஒக்ரோபர் 06 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியையும், வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் வெளிவாரிப் பட்டப்படிப்பு (இந்திய, பிரித்தானிய பல்கலைக்கழக பட்டப்படிப்புகள்) வளாகத்தையும் சுவீகரித்தே பல் கலைக்கழகத்தை உருவாக்கினார்கள்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் 15 பேர் தான் யாழ் பல்கலைக்கழகத்தின் முதல் அணியின் மாணவர்களாகும் பேறு பெற்றார்கள்.1975 ஏப்பிரல் மாதம் ஏ .எல் பரீட்சை எழுதிய மாணவர்கள் இரண்டாவது அணி மாணவர்களாக இருந்தார்கள்.

பேராசிரியர் கைலாசபதி யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது தலை வராகப் பணியாற்றினார்.

இடதுசாரிச் சிந்தனையுள்ள அவரை சிறிமா அரசாங்கம் தலைவராக்கியது. 1977 யூலையில் ஜே.ஆர் பிரதமராக கைலாசபதி வெளியேறினார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் முதலாவது துணைவேந்தரானார்.

பின்னர் பேராசிரியர் கைலாசபதி வந்து இணைந்தார். பின்னாளில் இரத்தப் புற்றுநோயால் இறந்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சுவீகரித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கியதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்கள்.1980 இல் வழக்கில் வென்று தமது வளாகத்தை மீட்டார்கள்.

பழமை பெருமை வாய்ந்த பரமேஸ்வராக் கல்லூரியை இழந்து தான் நாம் ஒரு பல்கலைக்கழகத்தைப் பெற வேண்டியதாகியது.

அதே போல வந்தாறுமூலை மகாவித்தியாலயம் எனும் பெருமை மிகு பாடசாலையை இழந்து தான் கிழக்குப் பல்கலைக்கழகம் உருவானது. ஆனால் சிங்களப் பகுதிகளில் புதிய நிலப்பரப்பு ஒன்றில் புதிய கட்டடங்கள் மூலமாக புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்கினார்கள்.

இவை இப்படியே இருக்கட்டும் .

தமிழ்ப் பிரதேசங்களில் அமைவிடத்தைக் கொண்டிருந்தும், தமிழ் மாணவர்களை அதிகளவில் உள்வாங்கியும் இயங்கும் யாழ்ப்பாண ,கிழக்குப் பல்கலைக்கழகங்கள் தமது விளம்பரங்களிலும், ஏனைய அறிவிப்புக்களிலும் தமிழை உதாசீனம் செய்வதை என்னவென்று சொல்வது...?

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

சாதுர்யமான பேச்சால் சாதித்துக் காட்டு வீர்கள். சுக்கிரன் வலுவாக நிற்பதால் உயர் ரக மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வாகன விபத்து, வாகனப் பழுது வந்துபோகும். மனைவியுடன் கருத்து மோதல் வரும். உற வினர்கள் ஒரு சிலரின் இரட்டை வேடத்தைப் பார்த்து வேதனைப்படுவீர்கள். மற்றவர்களுக் காகப் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். குடும்ப அந்தரங்க விட யங்களை எல்லாம் வெளியாட்களிடம் சொல் லிக் கொண்டிருக்காதீர்கள். வெளி வட்டா ரத்தில் மற்றவர்களை தாக்கிப் பேசாதீர்கள். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரிப்பால் சந்தோஷம் நிலைக்கும்.

## இடபம்

நெருங்கிப் பழகிய ஒரு சிலர் திடீரென்று பார்த்தும் பார்க்காமலும் செல்வார்கள். பணவரவு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும். அவர்கள் வெளிநாடு சென்று உயர்கல்வி பெற விசா கிடைக்கும். புதுப் பொறுப்புகளும், பதவிகளும் தேடி வரும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உங்களை இணைத்துக் கொள் வீர்கள். ஆன்மிக நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். கோயில் விழாக்களிலும் முதல் மரியாதை கிடைக்கும். புகழ்பெற்ற புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

## மிதுனம்

இங்கிதமானப் பேச்சாலும், யதார்த்தமான முடிவுகளாலும் நினைத்ததை முடித்துக் காட்டுவீர்கள் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குடும்ப அந்தரங்க விடயங்களை வெளியில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் அலட்சியப் போக்கு வேண்டாம். வருங்காலம் பற்றிய பயம் வரும். மற்றவர்களை நம்பி அனு பவமில்லாத தொழிலில் இறங்க வேண்டாம். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். வேலையாட்கள், பங்குதாரர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வார்கள்.

## கடகம்

தைரியம் பிறக்கும். பிரச்சினைகளின் ஆணி வேரைக் கண்டறிய முனைவீர்கள். கணவன், மனைவிக்குள் வீண் சந்தேகத்தால் வாக்கு வாதங்கள் வரும். கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிந்து செல்வார்கள். மன இறுக்கங்கள் குறை யும். பெண்கள் நிஜம் எது, நிழல் எது என்பதை உணர்வீர்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும். மாணவர்களின் கூடாப் பழக்கம் விலகும். நினைவாற்றல் பெருகும். வியாபாரத்தில் எதிர் பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். வேலை யாட்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

## சிம்மம்

நாவடக்கமும், எச்சரிக்கை உணர்வும் தேவை. வேலையாட்களை அவர்கள் போக்கி லேயே விட்டுப் பிடிப்பது நல்லது. இங்கிதமாகப் பேசி வாடிக்கையாளர்களைக் கவர்வீர்கள். பங்குதாரர்கள் உங்களைக் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். உத்தி யோகத்தில் ஒருபக்கம் வேலைச்சுமை இருந் தாலும் மற்றொரு பக்கம் தலைமைக்கு நெருக் கமாவீர்கள். சக ஊழியர்களால் சிறுசிறு ஏமாற்றம்வந்துச் செல்லும். எதிர்பார்த்த சலு கைகள் சற்றுத் தாமதமாகும்.

## கன்னி

பட்டிதொட்டியெங்கும் பாராட்டு கிடைக் கும். கன்னிப் பெண்கள் பெற்றோருடன் கலந் தாலோசித்து வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்கள் கல் வியில் ஆர்வம் காட்டுவார்கள். வியாபரத்தில் நவீன யுக்திகளை கையாளுவீர்கள். உத்தி யோகத்தில் உயரதிகாரிகளின் ராஜ தந் திரத்தை உடைத்தெறிவீர்கள். பெரிய பொறுப் புகள் தேடி வரும். சக ஊழியர்களை அன்பால் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரு வீர்கள். உங்களின் கோரிக்கைகள் பூர்த் தியாகும்.

## துலாம்

நண்பர்களுடன் இருந்து வந்த கருத்து மோதல் விலகும். நட்பு வட்டம் விரியும். பிள் ளைகளின் பொறுப்பற்றப் போக்கு மாறும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பணம் வரும். அரசியல்வாதிகள் தலைமைக்கு ஆலோ சனை சொல்லும் அளவுக்கு நெருக்கமாவீர்கள். பெண்களின் உயர்கல்வி சிறக்கும். மாண வர்கள் வகுப்பறையில் வீண் அரட்டை அடிக்காமல், கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் நற்பெயர் எடுக்க கொஞ்சம் போராட வேண்டி ஏற்படும். உங்களை எப்பொழுதும் எதிரியாக நினைத்த சக ஊழியர்கள் இனி வலிய வந்து நட்புறவாடுவார்கள்.

## விருச்சிகம்

உங்களைச் சுற்றியிருப்பவர்களின் பலம் பலவீனத்தை உணர்ந்து செயற்படத் தொடங் குவீர்கள்.

கலைத்துறையினரைப் புதிய நிறுவ னங்கள் அழைத்துப் பேசும். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். பெண்கள் பெற்றோரின் பாச மழையில் நனைவீர்கள். பள்ளி, கல்லூரி காலத் தோழியை சந்திப்பீர்கள். மாணவர்கள் சோம்பல் நீங்கி இனி சுறுசுறுப்பாகச் செயற் படுவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியா பாரத்தில் சந்தை இரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். வேலையாட்கள் கடமை உணர்வுடன் செயற்படுவார்கள்.

## தனுசு

உறவினர் வீட்டு விசேடங்களை முன் னின்று நடத்துவீர்கள். வெளிவட்டாரத் தொடர் புகள் விரிவடையும். பணப்பற்றாக்குறை இருக்கும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். ஹோர்மோன் கோளாறு, காது வலி வந்து நீங்கும். மாணவர்கள் படித்தால் மட்டும் போதாது விடைகளை எழுதிப் பாருங்கள். நல்ல நட்புச்சூழலை உருவாக்கிக் கொள் ளுங்கள்.வியாபாரத்தில் அதிரடி மாற்றங்கள் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். வேலையாட் கள், வாடிக்கையாளர்களிடம் கோபப்படாதீர்கள்.

## மகரம்

பழைய உறவினர், நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். கணவன், மனை விக்குள் மோதல்கள் வரக்கூடும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் செலவு இருக்கும் . மற்றவர்களை நம்பிப் பெரிய விடயங்களில் ஈடுபட வேண்டாம். குறிப்பாக பண விட யத்தில் கவனமாக இருங்கள். தடைப்பட்ட வேலைகள் உடனே முடியும். குடும்பத்தில் கணவன், மனைவிக்குள் நிலவிய கருத்து மோதல்கள் விலகும். அயல் வீடுகளுடன் இருந்த மனத்தாங்கல் விலகும்.

## கும்பம்

சட்டத்துக்குப் புறம்பான வகையில் யாருக் கும் உதவ வேண்டாம். கலைத்துறையினர் உங்களின் படைப்புகளை போராடி வெளியிட வேண்டி வரும். கிசுகிசுத் தொந்தரவுகளும் வரக் கூடும். விவசாயிகளுக்கு வாய்க்கால் வரப்புச் சண்டை வந்து நீங்கும். காய்கறி, பயறு வகை களால் ஆதாயம் அடைவீர்கள். வெற்றியின் விளிம்பைத் தொடுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் இருந்த தேக்க நிலை, மந்த நிலை மாறும். குடும்பத்தில் கணவன், மனை விக்குள் இருந்த பனிப்போர் நீங்கும்.

## மீனம்

வியாபாரத்தில் சில புதிய அனுபவங்கள் கிடைக்கும். கடன் வசூலாவதில் கொஞ்சம் சிர மம் இருக்கும். வேலையாட்கள் மதிப்பார்கள். பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் உங்கள் கடையைத் தேடி வருவார்கள். பங்குதாரர்களை விட்டுப் பிடியுங்கள். உத்தியோகத்தில் நேரங் காலம் பார்க்காமல் உழைத்தும் எந்தப் பயனும் இல்லையே, என்று அவ்வப்போது ஆதங்கப் படுவீர்கள். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். கலைத்துறையினர் உங்களின் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். விவசாயிகள் விளைச் சலை அதிகரிக்க முயற்சி எடுங்கள்.

**ஜதுனா அரசரட்ணம்**
(ஊடகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)



# தீண்டத் தகாததா மறுமணம்?

ஆரம்ப காலங்களில் திருமணம் முடித்த பெண்கள் தமது கணவன்மார் இறந்தால் கணவனின் உடல் எரியும் தீயில் விழுந்து எரிய வேண்டும். இதனைஉடன்கட்டை ஏறுதல் என அழைத்தனர். இதனையே காலம்செல்லச்செல்ல வெள்ளைச்சேலை அணிந்து விதவைக் கோலம் பூண்டு வீட்டு மூலைக்குள் முடங்கிக்கொள்ளவேண்டும் என அந்தக்காலச் சமூகம் வலியுறுத்தியது. இவ்வாறு பெண் என்றாலே சமூகத்தால் காலம் காலமாக கட்டமைக்கப்பட்ட பல கட்டுப்பாடுகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டாள். அதைவிடவும் பெண் என்றால் இப்படித்தான் வாழ வேண்டும், குடும்பத்தைப் பராமரிப்பதே அவளின் பிரதான பணி, அதிகமாகப் படிக்கக் கூடாது, கணவன் இறந்தால் பெண்களின் வாழ்க்கை முடிந்து விட்டது என ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படிருந்தன.

ஆனால் இன்றைய தொழில்நுட்ப உலகில் நிமிடத்துக்கு நிமிடம் மாறிக்கொண்டிருக்கும் வாழ்க்கை முறையிலே பெண்கள் கல்வி, தொழில், குடும்பம், சமூகம் என்பவற்றில் முதலிடம் வகிக்கின்றார்கள். ஆனாலும் சில சமூகங்களில் இவ்வாறான நம்பிக்கைகளின் அடி வேர்கள் இருக்கத்தான் செய்கின்றன. பத்து வருடங்களுக்கு முன்பு நாட்டில் இடம்பெற்ற யுத்தம் பல பெண்களை விதவை ஆக்கியுள்ளது. இந்த விதவை என்ற பட்ட பெயருக்கு வயது குறைந்த பெண்கள், தொழிலுக்குச் செல்லும் பெண்கள், திருமணமாகி இரண்டு நாட்கள் வாழ்ந்த பெண்கள் என வயது வேறுபாடு இன்றி சிறுமி முதல் வயது முதிர்ந்த பாட்டி வரை இலக்காகியுள்ளார்கள். ஆண் ஒருவர் மனைவி இறந்தால் மறுமணம் செய்வதை ஏற்றுக்கொள்ளும் சமூகம் தான் பெண் மறுமணம் செய்வதை பெரிதாக ஏற்றுக்கொள்வதில்லை. பெண்ணுக்கும் உயிர் உணர்வு ஆசை அவளுக்கு என்று இலக்கு இருக்கின்றது என்பதை யாரும் புரிந்துகொள்வதில்லை. இதனை அழகாக மக்கள் கவிஞர் வலியுறுத்தி பாடியிருக்கிறார்

"மனைவி மறைந்த பின் வயதான தாத்தாவும்
மறுமணம் பண்ணிக்கிட உரிமையுண்டு–இளம்
மங்கையை முடிப்பதுண்டு மண்டை வரண்டு–தன்
கணவனை இழந்தவள் கட்டழகி யானாலும்
கடைசியில் சாகமட்டும் உரிமையுண்டு–இதில்
கதைகளும் கட்டிவிடும் ஊர் திரண்டு"

ஒரு பெண் தனது எதிர்காலம் விருப்பம் என்பவற்றை கருத்தில் கொண்டு மறுமணம் செய்தால் 2 ஆம் திருமணம் தேவைதானா? பிள்ளைகள் இருக்கும் போது இது தேவையா? என கேட்கும் சமூகத்துக்கு மத்தியில்தான் ரதியும் வாழ்ந்து வருகிறாள்.

இவள் அரச அலுவலகத்தில் தற்காலிகமாக பணிபுரிபவள் இவளுக்கு ஒரு பெண் குழந்தை. திருமணமாகி 3 வருடங்களும் 13 நாட்களின் பின் விதவை என்ற பட்டப்பெயர் சூட்டப்பட்டது. அதன் பின்பு நன்மை நிகழ்வுகள், கோயில் திருவிழாக்கள் இவளுக்குத் தெரியாது.மரணச்சடங்குகளுக்கு மட்டும் குறித்த நேரத்துக்கு சென்றுவருவாள். மற்றபடி அலுவலகமும் வீடும் என அவளின் நாட்கள் கடந்தன. யுத்தம் முடிவடைந்து மீள்குடியேற்றத்தின் பின்னர் தன்னுடைய சம்பளத்திலே தன்னுடைய மகளையும் பெற்றோரையும் கவனித்து வந்தாள். பெற்றோரை கவனிப்பதற்கு வசதியான பிள்ளைகள் இருந்தும் தான் பார்ப்பேன் என்ற தைரியம் அவளுக்கிருந்தது.

ரதியை மறுமணத்துக்காக பெண் கேட்டுவந்த போது முதலிலே "வேண்டாம், எனக்கு பெண்பிள்ளை இருக்கு ஊரார் ஏதும் கதைப்பார்கள்" என மறுத்தாள். ஆயினும் நெருங்கிய உறவினர்களின் வேண்டுதலுக்கு இணங்க சம்மதித்தாள். ஆனால் ரதியின் தந்தை அவளுக்கு மறுமணம் செய்யவேண்டும் என் மற்றைய சகோதரர்களிடம் பேச்செடுக்கும் போது "இந்த மறுமணம் தேவையா? அவர் பிள்ளையை எப்படிப் பார்த்துக் கொள்வார்? இது சரிவராது "என வெறுப்பைக் காட்ட அப்படியே மறுமண பேச்சும் நிறுத்தப்பட்டது.

இவ்வாறு நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி 3 வருடங்கள் கடந்தன. ரதியின் பெற்றோர் மறுமணம் என்ற பேச்சையே மறந்தனர். ரதி தனது பெற்றோர், சகோதரர்களின் விருப்பத்தை மீறி மறுமணத்துக்காக கேட்டு வந்தவரையே பதிவுத் திருமணம் செய்து இன்று மற்றவர்களை விட சீருஞ்சிறப்புடனும் சந்தோசமாக வாழ்கிறாள். அவரும் ரதிக்கு சிறந்த கணவராகவும் மகளுக்கு அன்பான அப்பாகவும் வாழ்ந்து வருகிறார். மறுமணம் என்பதை எதிர்த்த சமூகம் தான் இன்று அவர்களை பார்த்து வியந்து பேசுகின்றது.

மறுமணம் என்பது ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல. பெண்களுக்கும் உரியது. பெண்களும் மறுமணம் செய்து வாழ்க்கையில் இன்ப துன்பங்களை அனுபவித்து தம் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தமுடியும். ■



# பெர்வீன் வர்சி: சமோசாவால் சாதித்தவள்

சாப்பிட்ட ஒரு சமோசா ஒரு பெண்ணின் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது என்று சொன்னாலோ, சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெர்வீன் வர்சியின் வியாபார மதிப்பு நம் ஊர் பணத்தில் இன்று 2270 கோடி என்றாலோ நம்பவா போகிறீர்கள். ஆனாலும் அதுதான் நிஜம்.

ஒரு லீவு நாள் அன்று தன் கணவரோடு பொருட்கள் வாங்குவதற்காக இங்கிலாந்தின் டெர்பி நகரத்தின் கடைத் தெருவுக்குச் சென்றாள் வர்சி. சின்னதாகப் பசியெடுத்தது. ஏதாவது சாப்பிடலாம் என்று கடை ஒன்றினுள் நுழைந்தாள். நான்கு பக்கமும் பளபளக்கும் கண்ணாடிகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பளிச்சென்றிருந்தன மேசைகள், கதிரைகள். அழகான மாபிள் பீங்கானில் சமோசாக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பார்த்ததும் நாக்கில் நீர் ஊறிவிட்டது. வழிந்து விடத் தயாரான உமிழ் நீரை கைக்குட்டையால் மெதுவாய்த் துடைத்துவிட்டவள் ஒரு சமோசாவை எடுத்து ஒரு கடி கடித்தாள். முகத்தைச் சுளித்தபடி கடித்ததைத் துப்ப நினைத்தாள். ஆனால் அது நாகரீகமல்ல என்பதால், நஞ்சை உண்பது போல் மிகவும் கஷ்டப்பட்டு விழுங்கினாள்.

சமோசாவா இது? வெறுத்துப்போனாள் வர்சி. சமோசாவுக்கான பிரத்தியே ருசி, மணம், சுவை, வெளியே மொறு மொறுப்பு, உள்ளே மிருதுவான மென்மை எதுவுமே அதில் இல்லை. 'ச்சே... என்ன இது சமோசா... நல்லாவே இல்லை' என்று தன் கணவரிடம் கடித்தது போக கையில் இருந்த மீதி சமோசாவை நீட்டினாள். 'இது இந்தியா கிடையாது. இங்கே இதுவாவது கிடைக்குதே. சந்தோசப்படு. ஆமா இதில இவ்வளவு குறை கண்டு பிடிக்கிறியே. உன்னால் முடிஞ்சா நீயே நல்ல சமோசா செய்து காட்டு' என்றார் கேலியாகச் சொன்னார் கணவர். வர்சி எதுவும் பேசவில்லை. வீடு திரும்பியவளுக்குக் கணவர் கிண்ணடலாகச் சொன்னது திரும்பத் திரும்ப ரீவைண்ட் ஆகி காதுக்குள் பூச்சி புகுந்ததுபோல் காதைக் குடைந்துகொண்டிருந்தது. அவள் கணவர் கிண்டலாகச் சொன்னாலும் அவள் அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. 'இதையே ஏன் ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளக்கூடாது. நமக்கு என்ன சமைக்கத் தெரியாதா,? சமோசாவைச் செய்துதான் காட்டுவோமே. செய்வதென்ன செய்வது. அதை விற்றுத்தான் காட்டுவோமே" என்று நினைத்துக்கொண்டாள். அவள் கட்டப்போகும் சாம்ராஜ்யத்துக்கு அந்த நினைப்புத்தான் அடிக்கல் என்பது வர்சிக்குக் கூட அப்போது தெரியாது.

சின்னச் சின்னச் சம்பவங்களில், நீங்கள் செய்யும் வேலையில்தான் உங்கள் வெற்றியின் ரகசியம் ஒளிந்திருக்கிறது' என்ற வாசகத்தை ஒரு புத்தகத்தில் முன்னர் படித்திருந்தாள் வர்சி. சட்டென்று அந்த வார்த்தை ஞாபகத்துக்கு வரவே குடுகுடுவென சமையலறைக்குள் நுழைந்தாள். முகம் முழுக்கப் புன்னகையோடு சமோசா செய்யத் தொடங்கினாள். உணவு தயாரிக்கும்போது கலக்க வேண்டியது உப்பு, புளி மட்டுமல்ல. நமது உணர்வும் தான் என்று அவளது அம்மா அடிக்கடி சொல்வார். வெறும் வார்த்தையாக இல்லாமல் வாழ்க்கைப்பாடமாகவும் வைத்திருந்தாள் வர்சி.

ஆறு சைவ சமோசா, ஆறு அசைவ சமோசாக்களைச் செய்துகொண்டு பக்கத்திலிருந்த கடைக்கு எடுத்துச் சென்று போய்க்கொடுத்தாள். ஆனால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. முன் பின் தெரியாத ஒரு பெண்ணை நம்பி எப்படி சமோசாக்களை வாங்கிக் கொள்வது என்று ரொம்பவே தயங்கினார்கள். ஆனால். வர்சி விடவில்லை. தொடர்ந்து பேசி அவர்களுக்கு நம்பிக்கையூட்டி சம்மதிக்க வைத்தாள். அரை மனதுடன் அவளிடமிருந்த தப்பிக்க முடியாமல் வாங்கிக்கொண்டார்கள்.

சற்றும் எதிர்பார்க்காதவண்ணம் வெகு விரைவாகவே அத்தனை சமோசாக்களும் விற்றுத் தீர்ந்தன. கடைக்காரருக்கும் ஆச்சரியம். ' என் சமோசாக்கள் விற்றுத் தீர்ந்ததா? அல்லது அப்படியே இருக்கின்றதா?" என்று வர்சி கேட்டபோது, கொஞ்சம் கூச்சத்தோடு புன்னகைத்தபடி, "இது போதாது இன்னும் அதிகம் சமோசாக்கள் சப்ளை பண்ணுங்கள்"என்றார் கடைக்காரர். மறுநாள் கொஞ்சம்' அதிகமாகவே செய்துகொண்டு ஒரு சூப்பர் மாக்கெட்டிலும் கொடுக்க, ஏற்கனவே நடந்ததுபோல் முன்னர் தயங்கி, பின்னர் வேண்டா வெறுப்பாக வாங்கிக்கொண்டார்கள். இரண்டு இடங்களில் இருந்தும் நல்ல ரிசல்ட். 'கொண்டு வா. கொண்டு வா சமோசா' என்று வர்சியைத் துரத்தத் தொடங்கினார்கள். நமக்கான பாதை கிடைத்துவிட்டது. இனி பட்டையைக் கிளப்ப வேண்டிதுதான் என்று முடிவெடுக்க சமையலறையே அவள் உலகமானது. அதன் பின் தன் குட்டி பிஸினஸை விரிவுபடுத்தியதுதான் அசத்தல் ரகம். வெறும் சமோசாக்கள் மட்டும் தினமும் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குச் சலிப்புத் தட்டலாம். அதனால், வித விதமாகக் கொடுப்போம் என்ற எண்ணம் மனதில் துளிர் விடவே கோராஸ், பாவ்பாஜி போன்ற வட இந்திய வகைகளோடு தந்தூரி சிக்கன், சப்பாத்தி வகைகள் என்று நிறைய உணவு வகைகள் வர்சியின் கைவண்ணத்தில் உருவாகின.

(தொடரும்)

**கவிஞர் பிறேம்ராஜ், கொழும்பு**


# கூட்டணி யாப்பை வரைந்தவர் யார்?


## அடங்கா தமிழன்

அடிமைத் தமிழன்


**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர்.சுந் தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகி றார் அடிமைத்தமிழன்.**







தமிழர் விடுதலைக்கூட்டணியை தந்தை செல் வாவும் ஜி.ஜி.பொன்னம்பலமும் இணைந்து உரு வாக்கினார்கள் என்றே சகலரும் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால் தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாக்கப்பட்ட போது அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்தையும் இணைத்தே தமிழர் விடுத லைக்கூட்டணி உருவாக்கப்பட்டது. வல்வெட்டித் துறை நகரசபைத் தலைவராக இருந்த ஞானமூர்த்தி பல தடவைகள் சுந்தரலிங்கத்தின் இல்லத்துக்கு விஜயம் செய்து, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றி யும், அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் நன்மை களையும் சொல்லி, வலியுறுத்தி சுந்தரலிங்கத்தை கூட்டணிக்குச் சம்மதிக்க வைத்தார். அவர் சம் மதித்த கையோடு அப்படியே, அழைத்துச்சென்றே தமிழர் விடுதலைக்கூட்டணியை உருவாக்கப்பட் டது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்புக் கூட சுந்தரலிங்கத்தாலேயே வரையப்பட்டதாக சிலர் கூறுகின்றனர். காலப்போக்கில்ஜி.ஜி. பொன்னம்பல மும், செல்வநாயாமும், சுந்தரலிங்கத்தை ஓரம் கட்டத் தொடங்கினார். இதனால் சுந்தரலிங்கம் தானாகவே தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து ஒதுங்கிக்கொண்டார். இதன் பின்னர் வந்த வர்கள் கூட்டணியின் வரலாற்றில் சுந்தரலிங்கத்தின் பெயர் வரமால் 'கவனமாகப்' பார்த்துக் கொண் டனர். ஏனெனில் தமிழர்கள் ஒற்றுமைக்குப் பேர் போனவர்களல்லவா.



# இந்திர விழாவில் ஒரு சூர்ப்பனகை

குணசேகரன் சுரேன்

வல்வெட்டித்துறை இந்திரவிழாவில் ஒரு அங்கமாக புகைக்கூண்டுகள் வானத்தில் விடுதல் நிகழ்வு, நெடியகாடு பிள்ளையார் ஆலயப் பக்கம் நடை பெற்றது. இராட்சதப் புகைக்கூண்டுகள் வானில் ஏறுவதைப் பார்ப்பதற்காக வந்திருந்தவர்களில், பலர் அங்கு இருந்த ஒரு புடவைக்கடையின் வெளிவாசல் படிக்கட்டுக்களில் அமர்ந்திருந்தனர்.

திடீரென அங்கு வந்த ஒரு பெண், (கடையின் உரிமையாளார் போல) துணிக்கயிறுகள் கொண்டு, வாசலில் இருந்த அனைவரையும் எழுப்பிவிட்டு, அந்த வாசலில் யாரும் இருக்காதவாறு குறுக்காக காட்டினார்.


சிறிது நேரத்தில் ஒரு படி மேலே போய் தண்ணீர் கொண்டு வந்து, யாரும் உட்காரவே கூடது என்ற வகையில் முழுவதுமாகத் தெளித்துவிட்டார்.

புகைக்கூண்டுகள் பறப்பதைப் பார்ப்பதைவிடுத்து அனைவரும் அந்த மன நோயாளியின் செயலையே பார்த்துக்கொண்டிருந்தனர். (அந்த பெண்ணின் முக ரியாக்சனை பார்க்க வேண்டும். சீரியல் நாடக வில்லிகளுக்கெல்லாம் வில்லியின் முகபாவனை.)

" அவை ஐயர் ஆக்கள் வேற ஆக்களை இருக்க விடாயினம்" என்று அங்கிருந்த ஒராள் அந்தப் பெண்ணின் நடத்தைக்குரிய காரணத்தைச் சொன்னார்.

பின்னேரம் 6 மணியிலிருந்து இரவு 1 மணி தாண்டி, "வாங்கோ.. வாங்கோ.. ரீ குடிச்சிட்டு போங்கோ"என்று ஓயாமல் அழைத்து தொடர்ந்தும் சுவையான தேநீரை அன்போடு வழங்கிக்கொண்டிருந்த மக்களும் அதே இந்திரவிழாவில் தான் இருந்தனர். இப்படிப்பட்ட ஜென்மம் ஒன்றும் அந்த விழாவில் இருந்தமை திருஷ்டிப் பொட்டாக மாறிவிட்டது.

# குவேனிகல (குவேனி கல்)



ஜஸீமா ஹனீட்

குருணாகலைக்கு சென்ற சுற்றுலாவில் ஒரு சுவாரஸ்யம்...எம் உறவினர் வீட்டுக்கு அருகிலிருந்த இந்த 'குவேனிகல. தித்தவெல்கால நிகதலுபொத என்னுமிடத்தில் இந்த பாறை மீது தூக்கி வைத்தாற் போல தெரியும் இன்னொரு கல் சரிந்து தெரிவது போல காட்சியளிக்கிறது இந்தக் கற்பாறை.இது பற்றிச் சிங்களப் பரம்பரைக் கதைகள் பல உலவுகின்றன.

விஜயன் குவேனியை திருமணம் செய்து ஜீவஹத்த, திஸாலா ஆகிய இரு பிள்ளைகளுடன் அவள் அரச குலத்தவள் அல்ல என்பதற்காக விரட்டியடித்தான். அவள் குருணாகலைக்கு ஓடி அங்குள்ள காடுகளில் அலைந்து திரிந்து பின் இந்த குவேனிகல அல்லது யக்தெசகலகந்த எனுமிடத்தில் வாழ்ந்ததாகவும்,பின் அங்கிருந்து தாமரைக் குளத்தில் பாய்ந்து உயிரை மாய்த்ததாகவும் நம்புகின்றனர்.

மிக அண்மையில் குவேனிகலயில் காணப்படும் புதையலை எடுப்பதற்காக நான்கு வயதுச் சிறுமி கடத்தப்பட்டமையும் இதனுடன் தொடர்புடைய காமினி என்பவன் ஏலவே " கிறீஸ் கள்ளனாகி" பல கன்னிப்பெண்களை தன் கூரிய நகத்தால் கீறி இரத்த மாதிரிகளை கொண்டுச் சென்றதும் இந்த புதையல் இரகசியம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியில் பொலிஸில் மாட்டி அடிவாங்கியதுதான் மிச்சம்.

குவேனிகலவுக்கு புதையல் கல் ( நிதன்கல) எனும் பெயரும் உண்டு.

# மருத்துவர்கள் மீது கொலைப்பழி: உண்மை என்ன?

**சிவச்சந்திரன் சிவஞானம்**
**(வைத்திய நிபுணர்)**

"வைத்தியர்கள் தவறு செய்துவிட்டார்கள், எல்லோரும் சேர்ந்து மறைத்துவிட்டார்கள்" என்று அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கும் அப்படியான செய்திகள் வரும்போதெல்லாம் யாராவது என்னை அந்த மரணம் பற்றி விளக்கம் கேட்பார்கள். அதில் சுவாரசியம் என்னவென்றால் என்னோடு சம்பந்தமில்லாத மரணம் பற்றி என்னிடம் விளக்கம் கேட்கும் பலரின் வீட்டிலே ஒன்று அல்லது பல வைத்தியர்கள் இருப்பார்கள். அவர்களிடம் இலகுவாக விடயங்களைக் கேட்டு விளக்கம்பெற முயற்சிக்காமல், என்னை இணைப்பதன் மூலம் அவர்கள் பகிர்கின்ற செய்திகளுக்கு ஒரு பரபரப்பை உருவாக்குவது மட்டுமே பலரின் நோக்கமாக இருக்கின்றது.

இலங்கையில் மட்டுமல்ல உலகத்தின் எந்தவொரு நாட்டிலும் மருத்துவத்துறையில் உள்ளவர்கள் மருத்துவ விடயங்கள் பற்றி வெளியிடுவதற்குத் தடை உள்ளது.

ஒரு மனைவி மருத்துவம் பெறும்போது அவரின் கணவரிடம்கூட மனைவி பற்றிய விடயங்களை மனைவியின் அனுமதியில்லாமல் சொல்லமுடியாது.

அதேபோல் ஒரு பெண் இறந்தால் அவரின் நெருங்கிய உறவினர்களோடு மட்டுமே அந்த மரணம் பற்றிய விடயங்களை உரையாட அனுமதியுள்ளது. மற்றவர்கள் அதுபற்றிய எந்த கருத்து வேண்டுமென்றாலும் உறவினர்களைத்தான் கேட்கவேண்டும்.

அண்மையில் நான் இங்கிலாந்து நாட்டின் பட்டமேற்படிப்புப் பரீட்சையொன்று எழுதினேன். அதில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி, "ஒரு மணமான பெண் தன்னுடைய புதிய காதலனோடு சேர்ந்து கர்ப்பம் தரித்துவிட்டு உங்களிடம் வருகிறார். அவர் அந்த விடயத்தை தன்னுடைய கணவனிடம் சொல்லாமல் கருக்கலைப்புச் செய்யும் படி கேட்கிறார். கருக்கலைப்புச் செய்யாமல் தான் கர்ப்பமாக இருக்கும் விடயம் கணவனுக்குத் தெரியவந்தால் தன்னுடைய மணவாழ்க்கை பாதிக்கப்படும் என்று கருதுகிறாள். கணவனோ தன்னுடைய மனைவியின் நிலமையைக்கேட்டு வற்புறுத்திக்கொண்டிருக்கிறார். அப்போது என்ன செய்வீர்கள்?"

அதற்கான பதில், கணவனிடம் விடயத்தைச் சொல்லாமல் கருக்கலைப்புச் செய்துவிடுவது என்பதுதான். இதுதான் மருத்துவத்துறையினருக்கு இருக்கும் கட்டுப்பாடுகள்.


அண்மையில் ஒரு நண்பன் ஒரு கர்ப்பிணி இறந்த செய்தியை அந்தப்பெண்ணின் படத்தோடு இணைத்து பேஸ்புக்கில் வெளியிட்டுவிட்டு என்னிடம் அந்தப்பெண்ணின் மரணத்திற்கான காரணம் கேட்டிருந்தார்.

அந்தப்படத்தை நானும் பேஸ்புக்கில் பகிர்ந்தால், யாராவது என்மீது கோபமாக இருக்கும் ஒருவர், விசாரணையில் இருக்கும் ஒரு மரணம் பற்றிய செய்தியையும், நோயாளியின் படத்தையும் உரியவர்களின் அனுமதியில்லாமல் பகிர்ந்துள்ளார் என்று முறைப்பாடு செய்தால், நான் மருத்துவராக வேலை செய்வதற்கான அனுமதி நீக்கப்படும் அபாயமும் உள்ளது.

அந்தச் சட்டச்சிக்கலுக்கு அப்பால் அந்த மரணம் பற்றிய காரணத்தை செய்திகளில் வரும் விடயத்தை மட்டும் வைத்து என்னால் ஊகிக்க முடியுமா? இல்லை.

போனவருடம் யாழ்ப்பாணத்தில் இறந்த கர்ப்பிணிகளின் விடயங்களை ஆராயும் கூட்டத்துக்கு அண்மையில் சென்றிருந்தேன். அதில் ஒரு கர்ப்பிணி கர்ப்பம் தரிந்த நாள் முதல் மரணமாகும் தினம் வரை நடந்த அத்தனை விடயமும் ஆராயப் பட்டது.

போன வருடம் மரணமான பெண்களின் செய்திகள் வழமைபோல பல இணையங்களில் வந்திருந்தன. அந்தக்கூட்டம் தவறுகளை அறிந்து அடுத்தமுறை அதைத் தடுப்பதற்காக நடத்தப்படும் கூட்டம். வைத்தியர் தவறுவிட்டது தெரியவந்தாலும் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப் படாமல், தவறுக்கான காரணத்தை ஆராய்ந்து அதை நிவர்த்தி செய்து இன்னொரு தவறு நடக்காமல இருப்பதற்காகச் செய்யப்படுவது. அதனால் அந்தக்கூட்டத்தில் பொய் சொல்லக் கூடாது. மேலும் அங்கே இருப்பவர்கள் எல்லோரும் மருத்துவத்துறை சார்ந்தவர்கள், ஆகவே பொய் சொல்லி இலகுவாக ஏமாற்றவும் முடியாது. ஆனால், அந்தக்கூட்டத்தில்சொல்லப் பட்ட விடயங்கள் அத்தனையும் இணையங்களில் வந்த செய்திகளோடு முற்றிலும் மாறுபட்டிருந்தன.



இப்படியான நிலமை இருக்கும்போது இணையத்தள செய்திகளை மட்டும் வைத்து எந்த ஒரு விடயத்தையும் என்னால் ஆராய முடியாது.

அப்படியென்றால் இலங்கையில் மருத்துவத் தவறுகள் நடப்பதேயில்லையா?

இலங்கையில் மட்டுமல்ல உலகத்தின் எந்தவொரு நாட்டிலும் மருத்துவத்தவறுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அமெரிக்காவில் வைத்திய சாலையில் ஏற்படும் மரணங்களுக்கான காரணங்களில் மூன்றாவது இடம் மருத்துவத் தவறுகளால் ஏற்படுவதாக அண்மையில் வாசித்தேன். இலங்கையிலும் அவை நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றைச் சட்டரீதியாக அணுகி பாதிக்கப்பட்டவர் தகுந்த நிவாரணம் பெற நம்நாட்டில் என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன?

முதலில் ஒரு மருத்துவத்தவறு நடந்துவிட்டதாக ஒரு நோயாளி நினைத்தால் இங்கிலாந்தில் என்ன நடக்குமென்று விளக்குகிறேன்.

ஒரு வைத்தியர் தவறு செய்ததாக நோயாளி நினைத்தால் முதலில் வைத்திய நிபுணர், என்ன நடந்தது என்ற விளக்கத்தை நோயாளிக்கு அளிப்பார். நோயாளி அதில் திருப்தியடையவில்லையென்றால் வைத்திய நிபுணரே அடுத்ததாக என்ன செய்யவேண்டும் என நோயாளிக்கு விளக்கமளிப்பார். அடுத்து வைத்தியசாலை மட்டத்தில் ஆரம்பக் கட்ட விசாரணையின் பின் நோயாளிக்குரிய விளக்கம் அளிக்கப்படும். நோயாளி அதில் திருப்தியடையவில்லை என்றால் சட்ட ரீதியாக வழக்குப் பதிவார். அப்போது வைத்தியசாலை சட்ட ஆலோசகர் வழக்கின் தன்மையை ஆராய்ந்து உண்மையில் தவறு நடக்கவில்லை என்று வாதிட்டு வெல்ல முடியாது என்றால், நோயாளியோடு தகுந்த நிவாரணத்தோடு சமரசம் செய்துகொள்ள வைத்தியசாலை முயற்சி செய்யும் அதுவும் திருப்தியில்லை என்று நீதிமன்றம் சென்று, அதன்பின் வைத்தியர் தவறு செய்ததாக தீர்ப்பு வெளியானால், நீதிமன்றம் சொல்லும் நஷ்ட ஈட்டை வைத்தியசாலை கொடுக்கும். அதேநேரம் வைத்தியர் விட்ட தவறுக்கேற்ப மீள் பயிற்சியளித்தல், வேலை நீக்கம் என தண்டனைகள் வைத்தியசாலையால் வழங்கப்படும்.

இங்கே ஒரு நோயாளிக்கான நஷ்ட ஈடு வைத்தியசாலைதான் கொடுக்கவேண்டுமென்றதால் தரக்கட்டுப்பாட்டில் வைத்தியசாலை மிகவும் அவதானமாக இருக்கும்.

இப்போது இலங்கையை யோசித்துப் பாருங்கள், நிலைமை புரியும்.

ஒரு வைத்தியர் தவறு விட்டால், வழக்குப் பதிந்து எத்தனை வருடங்களுக்குப்பின் தீர்ப்பு வரும்? நானறிய 15 வருடங்களாக நடைபெறும் வழக்குகளும் உள்ளன.

அடுத்து சட்டத்துறையின் வினைத்திறன் எப்படியிருக்கிறது?

வன்முறையை கையில் எடுக்காமல் சட்டப்படி அணுகுங்கள் என்று போட்ட ஒரு முன்னைய பதிவுக்கு ஒரு சட்டம் படிக்கும் மாணவன் இலங்கையில் சட்ட ரீதியாக அணுகுவதால் பயனில்லை என்று சொல்லுமளவுக்கு வினைத்திறன் குறைவாக இருக்கிறது.

அடுத்து நஷ்ட ஈட்டை யார் கொடுப்பது?

ஒரு மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தில் வேலை செய்கிறீர்கள், நீங்கள் தயாரித்த மென்பொருள் வேலை செய்யாமல் போக வாடிக்கையாளர் நஷ்ட ஈடு கேட்டால், உங்களை வேலைக்கமர்த்திய கம்பனி நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிட்டு உங்கள் மீது நடவடிக்கை எடுக்கும். இந்தச் சிக்கலினால் அந்தக்கம்பனி உண்மையில் திறமையானவர்களைத்தான் தேர்ந்தெடுக்கும்.

அதேபோல்தான் வைத்தியர் தவறு விட்டால் நஷ்ட ஈட்டை வேலைக்கமர்த்தியவர் கொடுக்க வேண்டும், அதன்பின் குறிப்பிட்ட வைத்தியர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். மென்பொருளும் உயிரும் ஒன்றா என்ற விதண்டாவாதமெல்லம் இங்கே வேண்டாம்.

ஒரு கற்பனையான உதாரணம் சொல்கிறேன்.

ஒரு கர்ப்பிணி இரவில் அட்மிட் ஆகிறார், ஜூனியர் வைத்தியர் நோயாளியைப் பார்த்து ஒரு முடிவினை எடுக்கிறார், அது பிழையான முடிவு. அதனால் நோயாளி இறக்கிறார். ஆனால் அவர் அந்த முடிவை வேண்டுமென்று எடுக்கவில்லை, அவரது அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையிலே எடுக்கிறார். அந்த இடத்திலே அவர் நோயாளியின் நிலமையைச் சரியாகக் கணித்து தனது சிரேஷ்ட வைத்தியரிடம் அறிவித்திருந்தால் நோயாளி காப்பாற்றப்பட்டிருப்பார்.

இந்த மரணத்தின் பின் என்னால் என்ன செய்ய முடியும்?

முதலில் உறவினருக்கு அந்த நோயாளி இறந்தமைக்கான மருத்துவக்காரணத்தைக் கூற வேண்டும். அடுத்து அவருக்குக் கொடுத்த மருத்துவச் சிகிச்சை பொருத்த மற்றதாகிவிட்டது அதனால்தான் அவர் இறந்துவிட்டார் என்று கூறமுடியும்.

அடுத்து வைத்தியசாலை அத்தியகட்சருக்கு அதுபற்றி அறிவித்து, அந்த ஜூனியர் டொக்டர் என்ன காரணத்தால் அந்தப் பிழை விட்டார் என ஆராய்ந்து, அவருக்கான மேலதிக பயிற்சி தேவையா? அல்லது வேறு ஏதாவது நடவடிக்கை தேவையா என்று ஆராய்வோம்.

ஆனால், இங்கே நிறையப்பேர் எதிர்பார்ப்பது உறவினர்களிடம் ஜூனியர் டொக்டர் பிழை செய்து கொலைசெய்துவிட்டார் என்று சொல்லி பல மில்லியன்களை அந்த ஜூனியர் டொக்டரிடம் நஷ்ட ஈடாகப்பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பது.

இங்கே ஜூனியர் டொக்டர் நோயாளி பற்றி எடுத்த கணிப்புத்தான் பிழை. அந்தப் பிழையான கணிப்பினை அவர் மேற்கொள்ள அவரது வேலைப்பளு அதிகமாகி களைப்பாக இருந்தது காரணமாக இருக்கலாம். அவர் அந்த நோயாளிக்குச் செய்த பரிசோதனைகளின் சில ரிப்போர்ட் பிழையாக வந்தது காரணமாக இருக்கலாம். இப்படிப்பல காரணங்கள் இருக்கலாம். அவற்றை ஆராய்ந்து நஷ்ட ஈடு பற்றி நான் முடிவெடுக்க முடியாது. அதை நீதிமன்றுதான் முடிவெடுக்கவேண்டும்.

ஆனால், அப்படியொரு மரணம் நடந்த பின் அடுத்த நாள் இணையத்தில் செய்தி எப்படி வெளிவரும்?

வலியோடு சென்ற பெண்ணை வைத்திய நிபுணர் பார்க்காமல் கொலை செய்துவிட்டார் என என் பெயர்தான் முதலில் பதிவாகும். அப்போதுகூட சிரேஷ்ட வைத்திய நிபுணர் தப்பிக்கொள்வதற்காக ஜூனியர் டொக்டர் என்னிடம் சொல்லாமல் விட்ட தவறுக்கு நான் என்ன செய்யமுடியும் என்று கூற முடியாது.

(19ஆம் பக்கம் பார்க்க)

# விலாங்கு அதிபர்




● ஒற்றன்

வவுனியாவிலுள்ள இரு மொழிப்பாடசாலையொன்றின் அதிபர் பலே கில்லாடி. அந்தப் பாடசாலையில் தான், சில மாதங்களுக்கு முன்னர் வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் சர்வேஸ்வரன், சிங்கக்கொடியை ஏற்ற மறுத்ததை, பூதாகரமாக்கியதில் குறித்த அதிபருக்கும் முக்கிய பங்குண்டு.

அண்மையில் அந்தப் பாடசாலைக்கு வழங்கப்பட்ட லப்றொப்களில் ஒன்றைத் தன் வீட்டுக்கு கொண்டு சென்று விட்டார். பின்னர் பொலிஸ் நிலையத்துக்குச்சென்று 'லப்றொப்' களவு போய் விட்டதாக முறைப்பாடு செய்துள்ளார். அத்தோடு விசயத்தை அமுக்கி விட்டார்.

இவர் 'கலா அக்கா' மூலமும் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார். கலா அக்காவிடம் வரும் போது தனது பாடசாலையில் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களை அழைத்து வருகிறார். தனது பாடசாலையிலுள்ள சிங்கள ஆசிரியர்கள் தனக்கு எதிராகச் செயற்படுவதாகவும், தான் தமிழ் மாணவர்களுக்கு சார்பாகச் செயற்படுவதாகவும் கலா அக்காவிடம் முறைப்பாடு செய்வார்.

ஆனால் இதே அதிபர் இசுருபாயவுக்கு ( கல்வித்திணைக்களம், கல்வியமைச்சு என்பன அமைந்துள்ள இடம்) செல்லும் போது சிங்கள ஆசிரியர்களை அழைத்துச்செல்கிறார். அங்கு தான் சிங்கள மாணவர்களுக்கு சார்பாக செயற்படுவதால் தமிழ் அதிகாரிகள் தன்னைப் பழி வாங்குவதாக அங்கு இன்னொரு வகையில் முறைப்பாடு செய்வார். இப்படி மீனுக்கு தலையையும் , பாம்புக்கு வாலையும் காட்டிப் பிழைக்கத் தெரிந்தவர் இந்த அதிபர்.

இப்படி விலாங்கு மீனாக மாறி சுழித்தோடும் அந்த அதிபர், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், பதவியில் தொடரவும், பதவியுயர்வு பெறவும் இரண்டாம் மொழியான தமிழ் மொழியில் சித்தி பெற வேண்டியது அவசியம். ஆனால் அவருக்குச் சுட்டுப்போட்டாலும் தமிழ் வாசிக்க, எழுத வராது. இதனால் ஒரு ஐடியா போட்டார். தனது பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை தனக்காக கிளிநொச்சியில் சென்று குதிரை ஓடுமாறு வற்புறுத்தியுள்ளார். அப்படி ஓடாவிட்டால் 'தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றல் வாங்கித் தருவேன்' என்றும் மிரட்டியுள்ளார். ஆனால் இதற்கு அந்த ஆசிரியர் மறுப்பு தெரிவித்து 'செய்வதைச் செய்யுங்கள்' என்று சொல்ல, கில்லாடி அதிபர் 'பொத்திக்' கொண்டு போய் விட்டாராம்.



# இசையும் வதையும்

● உமாஜி

"உன் புடவை முந்தானை சாய்ந்ததில் இந்த பூமி.." - என்னமோ உலகத்திலேயே ரொம்ப அதிசயமான கொடூரமான, வெறித்தனமான கவிதை வரி என்று இப்போதும் கண்டுபிடித்துச் சிலாகிப்பவர்கள் மீது உங்களுக்கு கொலைவெறி வருவதுண்டா?

"பெண் இல்லாத ஊரிலே.." ஆரம்பித்து இந்த வரிகளை புல்லாங்குழலில் திரும்பத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தால் எப்பிடியிருக்கும்? அதை "மீயூசிக்கா" போட்டுட்டு பாண் விற்கிறார்கள் இங்கே. காலையும் மாலையும். இதோ இப்போதும் கேட்கிறது.

அது பாணுக்குத்தான் என்பதை உடனே கண்டுபிடிச்சதே என் முன் அனுபவத்தில்தான். 2015இல் நீண்டகாலத்துக்குப் பிறகு யாழ்ப்பாணம் வந்து நின்ற நாட்கள். காலை, மாலையில் தொடர்ந்து தூரத்தில, "அந்த வானுக்கு ரெண்டு தீபங்கள்..." பாட்டின் இடையிசை தொடர்ச்சியாகக் கேட்டுட்டிருக்கும். குழப்பமாக இருந்தது, என் பிரமையோ என்று. பிறகு கண்டுபிடிச்சதுதான்அது, "பாணுக்கு ரெண்டு தீபங்கள்" எண்டதை.

எதற்கு இதெல்லாம்? பாண் விற்கிறதுக்காகவே பீத்தோவன் கஷ்டப்பட்டு Fur elise போட்டு வச்சிருக்கிறார் இல்லையா? அதைத்தானே கொழும்பில் யூஸ் பண்ணுகிறார்கள்.

இப்படித்தான் ஒருமுறை "ஆ.., ஏய்ய்.., ச்சீ"என்றெல்லாம் பெரிய சத்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. தொடர்ந்து "நேத்து ராத்திரி யம்மா", "நிலாக்காயுதே", "கண்ணைத் திறக்கணும் சாமி" என பாடல் வரிசை. பதறிப் போய்ப் பார்த்தால், ஐஸ்கிறீம் வாகனம். ஐஸ்கிறீமை அவ்வளவு கலவரமாக விற்கிறார்கள்.

நேற்றுக் காலையிலிருந்து நெடு நேரமாகத் தொடர்ந்து தூரத்தில் "மறு வார்த்தை பேசாதே.." பாடல். ஒலி நகரவில்லை. ஆக பாண் கிடையாது. குழப்பமாக இருந்தது. தொடர்ந்து அப்படியே கேட்டுக்கொண்டேயிருந்தது. பிறகுதான் தெரிந்தது. எங்கோ கோவிலில் பூசை. அய்யர் மந்திரம் சொல்லிக்கொண்டிருந்தார்.




# பொட்டும் போட்டோவும்

● யாத்ரா



வெள்ளவத்தையில் இருந்து கம்பஸூக்கு பஸ்ஸில் செல்லும் போது, ரத்மலானையில் காலி வீதி ஓரத்திலேயே ஆயுள்வேத டிஸ்பென்சரி ஒன்றை கண்டேன். பொதுவாக ஆயுள்வேத மருந்து எடுப்பதற்காகவே யாழ்ப்பாணம் சென்று கைதடியில் மருந்து எடுக்கும் வழக்கத்தை வைத்திருக்கிறேன். இங்கும் ஆயுள்வேதத்தைப் பார்த்ததும் ஆனந்தமாகி விட்டது. கூடவே , வேறு தமிழ் ஆட்கள் யாரும் மருந்து எடுத்திருக்கிறார்களா? வைத்தியர் எப்படி? மருந்து வேலை செய்யுமா? என்று வழக்கமான சந்தேகங்கள் தொற்றிக் கொண்டன. சரி, எதற்கும் யாரிடமாவது விசாரித்து விட்டு அங்கு மருந்தெடுக்கலாம் என்று முடிவு செய்து, அந்த இடத்தின் முகவரியை நினைவில் வைத்திருக்க , அதன் முகப்பு பலகையை கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்தேன்..

என் துரதிர்ஷ்டம்... அன்று பொட்டு வேறு வைத்திருந்தேன்.. கம்பஸில் 'ரெக்கோர்ட் புக்'கையோ, கம்பஸ் அடையாள அட்டையையோ மறந்து செல்லும் நாளில் பொட்டைக் கழற்றி விட்டு செல்வது வழக்கம். பொட்டு வைத்திருந்தால் அட்டையைக் காட்டுமாறு கேட்கப்படுவோம். ஒருமுறை எல்லோரும் கும்பலாக அட்டையை விடுதியில் வைத்துவிட்டு வெளியே சாப்பாடு எடுக்கச் சென்றோம். திரும்பிவந்தபோது, பொட்டு எங்களைக் காட்டிக் கொடுக்க அடையாள அட்டையைக் கேட்டார்கள். விடுதியில் இருக்கிறது என்று சொல்லியும் உள்ளே அனுமதிக்கவில்லை. பின்னர், விடுதிக்கு அழைப்பெடுத்து, அடையாள அட்டை வந்தபின்தான் கம்பஸூக்குள் போக முடிந்தது. அன்றைக்கு பொட்டு வைக்காமல் போயிருந்தால், எங்களையும் சிங்கள மாணவர்கள் என்று அடையாள அட்டை கேட்காமலே உள்ளே போக விட்டிருப்பார்கள். என்றாலும் அதற்குப் பின்னரும் பெரும்பாலும் பொட்டு வைத்துக் கொண்டு தான் நாம் சென்றோம். அப்படியான ஒருநாளில் தான் இந்தச் சம்பவமும் நடந்தது. நான் படம் எடுப்பதை அங்கு நின்ற "அற்றெண்டர்" கவனித்து விட்டான். அவ்வளவு தான்.

"என்ன போட்டோ எடுக்கிறாய்? ஏன் எடுக்கிறாய்?" என்று சிங்களத்தில் குய்யோ முய்யோ வென்றான். நானும் எனக்குத் தெரிந்த சிங்களத்தில் காரணத்தைச் சொன்னேன். ஆனால் அவனோ "அப்படியெல்லாம் எடுக்க முடியாது. உள்ள வாங்க.. கதைக்க வேண்டும்" என்றான். உள்ளே ஐந்தாறு பேர் மருந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். அறையில் இரண்டு பெண் வைத்தியர்கள் இருந்தார்கள். எனக்குப் புரிந்துவிட்டது. அதற்கு மேல் சிங்களத்தில் கேள்வி கேட்டால் எனக்குப் புரியாது என்று அவனுக்கு விளங்கியிருக்க வேண்டும். வைத்தியர்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்பதால் அவர்களிடம் அனுப்புகிறான்..

நடந்ததைக் கூறி என்னை அவர்களுடன் கதைக்க சொன்னான். அவர்கள் நான் எடுத்த படத்தைக் காட்ட சொன்னார்கள். காட்டினேன். "இதை இப்போதே இங்கேயே அழிக்க வேண்டும்" என்றார்கள். நான் அதை எடுத்ததற்கான காரணத்தைக் கூறினேன். அதனை அழிக்குமாறும், வேண்டுமானால் தான் அந்த ஆயுள்வேத வைத்திய நிலையத்தின் முகவரியை எழுதித் தருவதாகவும் கூறினார். அப்போதும் அவருக்கு நம்பிக்கை இல்லை.. "என்ன வருத்தம்? யாரிடம் காட்டினாய்?" என்றெல்லாம் கேட்டார். எனக்கு எரிச்சல் பீறிட்டது. ஆனாலும் பல்லைக் கடித்துக் கொண்டு, பொறுமையாகப் பதில் சொன்னேன். அவர்கள் கேட்கக் கேட்க, "புகைப்படம் எடுக்கத் தடை செய்யப்பட்ட இடத்தைத் தான் நான் படம் எடுத்து விட்டேனோ? என்ற குற்றவுணர்ச்சி என்னில் தொற்றிக் கொள்ள, பதில் சொல்லாமல் மௌனித்தேன்.

ஒருவழியாக கைதியை விசாரித்துவிட்டு அனுப்புவது போல திருப்பி அனுப்பினார்கள். இதற்கு பிறகும் அங்கு போய் மருந்து. எடுக்கத்தான் வேண்டுமா என்னுமளவுக்கு மனசு முழுக்க அவமானத்தால் நிரம்பி வழிந்தது., அன்று முழுதும் அதே உணர்வு. சரி, எதற்கும் கூகிளில் தேடிப்பார்ப்போம் என்று, அந்த வைத்தியசாலையின் விபரத்தைத் தேடினேன். உடனேயே கூகிளாண்டவர், அதன் முகப்பு படத்தோடு இன்ன சில படங்களையும் தரவுகளையும் அள்ளித் தந்தார். இப்படி பொது வெளியில் பெற்றுக்கொள்ளக்கூடிய புகைப்படம் உலாவுகையில், என்ன இரகசியம் இருப்பதாக என்னைப் புகைப்படம் எடுக்க விடாமல் - அதுவும் வெளி முகப்பை எடுக்க விடாமல்- தடுத்தார்கள் என்று இதுவரை புரியவேயில்லை. ஒரு வேளை நான் தமிழிச்சி என்பதால் இருக்குமா? பாலாறும் தேனாறும் ஓடும் இலங்கைத் திருநாட்டில் அப்படி இனங்களின் பெயரால், ஒரு போட்டோவுக்கு இப்படி அக்கப்போர் செய்வார்களா என்ன? ■

# சிவப்பு ஞாயிறு



(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளை எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வேன், வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் வீதியில் கைப்பற்றப்பட்டது. அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் தங்கியிருந்த இடம் என்று சந்தேகிக்கப்படும், வீடு ஒன்றும் மாலை பாணந்துறை வடக்கு சரிக்கமுல்ல பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பதுளை - தியதலாவை பகுதியில் 22 ஆம் திகதி காலை விமானப்படையினரால் நடத்தப்பட்ட விசேட சுற்றி வளைப்பின் போது, வீடொன்றிலிருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன. ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தியதலாவை பகுதியில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதிகளிலும், ஏனைய சில இடங்களிலும் விசேட தேடுதல் வேட்டை இடம்பெற்று வருகின்றது.

இலங்கையிலுள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்திய உயர் ஆணையம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் காணப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

**சர்ச்சையைக் கிளப்பும் டுவிட்டும் இருண்ட ஈபெள் கோபுரமும்**

இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்திய உயர் ஆணையம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் காணப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு அமைச்சர் ஹறின் பெர்ணான்டோ, தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள கடிதமானது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

தேசிய தவுத் ஜமாத் அமைப்பின் தலைவர் மொஹமட் தாயிம் மொஹமட் சஹறானின் தலைமையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுப் பிரிவினரால் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தகவல்களின் பிரகாரம், தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிட்ட சிலர் குறித்தும் தகவல்கள் கிடைத்துள்ளதா்க அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களின் முழுமையான தகவல்களும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு, பாதுகாப்பு பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை திட்டமிட்ட சந்தேக நபர், சமூக வலைதளங்களின் ஊடாக இந்த செயற்பாட்டை முன்னெடுத்துள்ளதாகவும் புலனாய்வு பிரிவின் தகவல்களை மேற்கோள்காட்டி, பாதுகாப்பு அமைச்சகத்தினால் அந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்இருப்பதாக இரண்டு வாரங்களுக்கு முன்னரே எச்சரிக்கை விடுக்கப்பட்டது என அமைச்சர் மனோ கணேசனும் தனது டுவிட்டர் பக்கத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், இந்தத் தாக்குதல் குறித்து முன்பே உளவு அமைப்புகளுக்கு தகவல்கள் வந்தன என்பதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. ஆனாலும் சுதாரிப்பதற்குள் தாக்குதல்கள் நடந்தேறிவிட்டன என்று பொறுப்பற்ற விதத்தில் பதில் வழங்கப்பட்டுள்ளது. வெளியிடப்பட்டுள்ள கடிதம் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது.

உலக அதிசயங்களில் ஒன்றான ஈபெல் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு, இலங்கையில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. 21 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் ஈபெல் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

**வெளிநாட்டவர்கள் பலி சுற்றுலாத்துறைக்கு அச்சுறுத்தல்**

தொடர் குண்டுவெடிப்புகளில் 36 வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 9 பேர் காணாமல் போயிருப்பதாகவும், வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. கொல்லப்பட்ட 25 வெளிநாட்டவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் கொழும்பு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. 9 வெளிநாட்டவர்கள் காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 19 வெளிநாட்டவர்கள் காயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்புக்கு வெளியே குண்டுகள் வெடித்த நீர்கொழும்பு, மட்டக்களப்பு மருத்துவமனைகளிலோ, கொழும்பு வடக்கு மருத்துவமனையிலோ வெளிநாட்டவர்களின் சடலங்களோ, காயமுற்றவர்களோ அனுமதிக்கப்படவில்லை என்று அந்தந்த மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தொடர்குண்டுவெடிப்புகளை அடுத்து பல நாடுகள், தமது குடிமக்களை இலங்கைக்கு செல்வது குறித்து அவதானமாக இருக்குமாறு பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளன.

பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ள அதேவேளை, இலங்கையிலுள்ள உள்ள தமது குடிமக்களை பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும், உதவிகள் தேவைப்பட்டால் தூதரகங்களை அழைக்குமாறும் கோரியுள்ளன.

பயண எச்சரிக்கையாலும், குண்டு வெடிப்பு சம்பவங்களாலும் இலங்கையின் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்படும் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கை பொருளாதாரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும் இது என அரச தரப்பிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**இரண்டு வாரங்களில் அறிக்கை**

நாட்டில் இடம்பெற்ற தேசிய துன்பியல் சம்பவத்துக்கான அடிப்படைக் காரணிகளையும், அதன் பின்னணியையும் கண்டறிவதற்கு விசேஷ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசர் உள்ளிட்ட விசேட குழுவொன்றே நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிடுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் யார், அதன் பின்னணி என்ன? தாக்குதலை நடத்தியது சர்வதேச பயங்கரவாத அமைப்பா அல்லது உள்நாட்டு அமைப்பா என்பன குறித்து பலகோணங்களில் சி.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு உலக நாடுகளின் உளவு பிரிவுகளும் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பொன்றாலேயே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சில ஊடகங்களிலும் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இலங்கை பாதுகாப்பு அமைச்சால் இது குறித்து இன்னும் ( இக்கட்டுரை அச்சுக்கு செல்லும்வரை) உத்தியோகப்பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

எது எப்படியிருந்தபோதிலும் அப்பாவி மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலானது மிருகத்தனமானது. பல குடும்பங்கள் இன்று அநாதைகளாக்கப்பட்டுள்ளன. தாய், தந்தையை இழந்து குழந்தைகள் தவிக்கின்றன. முழு நாடும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

> இப்பகுதியில் தொடராக வந்துகொண்டிருந்த 'யாழ்ப்பாணம்' தொடர், தவிர்க்கமுடியாத காரணத்தால் இவ்வாரம் வெளிவரவில்லை. அடுத்தவாரம் முதல் வழமை போல் வெளிவரும்.

---

# மருத்துவர்கள் மீது கொலைப்பழி: உண்மை என்ன?

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், அப்படி பிழையான முடிவை எடுக்கும் நிலையில் ஒரு ஜூனியர் டொக்டர் இருப்பதை கணிக்காத சிரேஷ்ட வைத்திய நிபுணரும் அந்த மரணத்துக்கான பொறுப்பை கொஞ்சம் எடுத்தாக வேண்டும்.

நடைமுறையில் இவ்வாறான தவறுகளைத் தடுக்க என்ன செய்யமுடியும்?

இந்தக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் என் விடுதியில் கடமையில் இருக்கும் ஜூனியர் டொக்டர் வெறும் ஒருமாதம் மட்டும் அனுபவம் உள்ளவர்.

ஒரு பெரிய வைத்தியசாலையில் சாதாரணமாக ஆறு மாதம் அனுபவம் வரும்வரை தனியாக கடமை கொடுக்கப்படாது. ஆனால் 4 வைத்தியர்கள், நால்வருமே மிகவும் அனுப்வம் குறைந்தவர்களாக இருக்கும் என் விடுதியில் அது சாத்தியமில்லை.

அதனால், வருகின்ற ஒவ்வொரு நோயாளி பற்றியும் எனக்கு அறிவிக்கவேண்டும் என்று சொல்லி என்னுடைய கடுமையான மேற்பார்வையின்கீழ் அவரைத் தனியாக கடமை செய்ய அனுமதிப்பதைவிட வேறு வழி என்னிடம் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் வேலைப்பளு எனக்கும் அதிகம், அந்த ஜூனியருக்கும் அதிகம். இருந்தாலும் நோயாளிகளின் நன்மை கருதி அதீத பொறுப்பெடுத்து இதைச் செய்துகொண்டிருக்கிறோம். எந்தத்தவறும் நடந்து ஒரு நோயாளியும் பாதிக்கப்பட விடமாட்டோம் என்ற நம்பிக்கையில்தான் இதைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் 100 வீதம் தவறினைத்தடுக்கவேண்டுமென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

இவ்வாறு அதிக பொறுப்பெடுத்து நானும் அந்த ஜூனியர்டொக்டரும் வேலை செய்யாமல் தப்பித்துக்கொள்ள இலகுவான சட்டரீதியான வழியும் எங்களிடம் இருக்கிறது.

தனி ஒரு நிபுணர் இருக்கும் வைத்தியசாலையில்



ஒன்றுவிட்டு ஒருநாள்தான் முழுநேர டியூட்டி செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. அந்த கட்டாயத்தின் படி நான் ஒன்றுவிட்டு ஒருநாள் டியூட்டி செய்தால் பிரச்சினை மிக இலகுவாகிவிடும்.

நான் முழுநேரக்கடமையில் இருக்கும் நாட்களில் மட்டும் பிரசவங்களைப்பார்த்துவிட்டு, அடுத்த நாள் 4 மணியோடு அத்தனை கர்ப்பிணிகளையும் வைத்திய நிபுணர் கடமையில் இல்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப, சட்ட ரீதியாக எமக்கு உரித்துண்டு. அவ்வாறு செய்துவிட்டால் நூற்றுக்கு கிட்டத்தட்ட 75 வீதத்துக்கும் அதிகமான கர்ப்பிணிகள் யாழ்ப்பாணத்துக்குத்தான் செல்ல வேண்டும்.

அதேபோல், நான் கடமையில் இருக்கும் நாட்களில்கூட இங்கே இருக்கும் வசதிகள் போதாது என்று கணிசமாக நோயாளிகளை யாழ்ப்பாணத்துக்குச் சட்ட ரீதியாக அனுப்பிவிட முடியும்.

இங்கே ஒரு கருதுகோளாக என்னை உதாரணமாகக்காட்டி எழுதினாலும், ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒவ்வொரு வைத்தியர்களும் இப்படியான சிக்கல்களோடுதான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

இப்படியான நடைமுறைச் சிக்கல்களோடு வேலை செய்துகொண்டுகொண்டிருக்கும் எங்களிடம் வந்து, இந்த நடைமுறைசிக்கல்கள் எதுவுமில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் இங்கிலாந்து போல சேவையை எதிர்ப்பார்ப்பது எந்தவகையில் நியாயம்?

இப்படி நடைமுறைச் சிக்கல்களே இல்லாத இங்கிலாந்திலே மருத்துவத்தவறுகள் நடைபெறும்போது, இங்கே ஒரு தவறுகூட நடைபெறக்கூடாது என்று எதிர்ப்பார்ப்பதும் எந்தவகையில் நியாயம்?

100 வீதம் தவறு நடக்காமல் மருத்துவம் பார்க்க வேண்டும் இல்லாவிட்டால், நஷ்ட ஈட்டை வைத்தியர்தான் தரவேண்டும் என்ற எச்சரிக்கையோடு நோயாளிகள் வரத்தொடங்கினால் அநேகமான வைத்தியர்கள் மேலே சொன்னபடிதங்களைப்பாதுக்காத்துக்கொள்வைதமட்டும் அடிப்படையாக வைத்து இலகுவாக நோயாளிகளைப் பொறுப்பெடுக்காமல் தட்டிக்கழித்துவிடும் அபாயமும் உள்ளது.

ஆகவே மருத்துவத்தவறுகள் பற்றி நீங்கள் உண்மையில் அக்கறையுடையவராக இருந்தால் மேலே சொன்ன அத்தனை குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டு, அபிவிருத்தியடைந்த நாட்டில் உள்ளதுபோல ஒரு கட்டமைப்பை உருவாக்க உரியவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மாறாக வெறும் லைக்குக்காக சமூக வளைத்தளங்களில் வைத்தியர்களைக் குறிவைப்பதால் ஒரு எள்ளளவும் நன்மை வராது.







இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.04.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.